# SLIDA

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය

SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# SLIDA 2011 ANNUAL REPORT

වාර්ෂික වාර්තාව | ஆண்டறிக்கை



# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

# ஆண்டறிக்கை

# 2011

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு-07.

**Tel: 25980200 Fax: 2584406 E-mail: mail@slida.lk Web: www.slida.lk**

# பொருளடக்கம்

பக்க இல.


| | | |
|---|---|---|
| 01 | **இஅநிநி இன் நோக்கும் செயற்பணியும்** | 02 |
| 02 | எமது இலக்குகள் நோக்கங்கள் குறிக்கோள்கள் | 03 |
| 03 | ஆளுனர் சபை அங்கத்தவர்கள் | 05 |
| 04 | சிரேஸ்ட முகாமைத்துவமும் பீடமும் | 06 |
| 05 | பணிப்பாளர் அறிக்கை | 10 |
| 06 | அறிமுகம் | 14 |
| 07 | இஅநிநி இன் நிருவாக கட்டமைப்பு | 15 |
| 08 | இஅநிநி இல் கிடைக்கக்கூடிய பௌதீக மூலவளங்கள் | 16 |
| 09 | இஅதிதி இள் தந்திரோபாய மீளாய்வு | 21 |
| 10 | செயற்பாட்டு மீளாய்வு | |
| 10.1 | பொது நிருவாக மற்றும் உள்ளூராட்சிக்கான நிலையம் | 50 |
| 10.2 | சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கைகளுக்கான நிலையம் | 51 |
| 10.3 | நிதி முகாமைத்துவத்திற்கான நிலையம் | 52 |
| 10.4 | முகாமைத்துவ கற்கைகளுக்கான நிலையம் | 53 |
| 10.5 | மனித வள அபிவிருத்திக்கான நிலையம் | 54 |
| 10.6 | உற்பத்தி திறன் மற்றும் தரத்திற்கான நிலையம் | 55 |
| 10.7 | தகவல் தொழில்நுட்பத்திற்கான நிலையம் | 56 |
| 10.8 | மொழிக் கல்விக்கான நிலையம் | 57 |
| 10.9 | கருத்திட்ட முகாமைக்கான நிலையம் | 58 |
| 10.10 | ஆராய்ச்சி மற்றும் கொள்கை கற்கைகளுக்கான நிலையம் | 59 |
| 10.11 | விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 60 |
| 10.12 | திறனைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 61 |
| 10.13 | வெளியக பரீட்சைகள் | 62 |
| 10.14 | பயிற்சியளித்தல் உசாவுலர் சேவைகள் | 63 |
| 10.15 | முகாமைத்துவ உசாவுலர் சேவைகள் | 66 |
| 10.16 | தகவல் தொழில்நுட்ப நிலையம் | 67 |
| 10.17 | பட்டப்படிப்பு பாடசாலை | 71 |
| 11 | குறித்த காலப்பகுதிக்குரிய அடைவுகள் | 72 |
| 12 | உள்ளக கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு | 75 |
| 13 | நிதி மற்றும் தகவல் சேவைகள் | 77 |
| 14 | நிதிசார் மீளாய்வு | |
| | • வருமான செலவு கணக்கு | 81 |
| | • ஐந்தொகை | 83 |
| 15 | குறித்த ஆண்டுக்குரிய அடைவுகள் | 90 |



## தூரநோக்கு

அரசதுறை
கற்கைகளுக்கான
மேன்மை மிக்க
நிலையமாக விளங்குதல்

## செயற்பணி

பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் ஆய்வுகள் மூலம் வினைத்திறன் மிக்க, பயனுறுதி வாய்ந்த எதிர்கால நோக்கினைக் கொண்ட அரச சேவை ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளினை அளித்தல்

# 02 – எமது குறிக்கோள்களும் நோக்கங்களும்

## குறிக்கோள்கள்

1. நிறைவேற்று மட்டத்திலான ஊழியர்களை விசேடமாக கருத்திற் கொண்டு அரச துறை ஊழியர்களுக்கு நவீன அரச நிருவாக /முகாமைத்துவ அறிவு, திறன்கள் மற்றும் சாதக நடத்தைசார் மாற்றுக் கருத்துக்கான திறன்களை வழங்குதல்

2. அரச சேவையின் ஒழுக்க விழுமியம் மற்றும் சேவைக் கலாச்சாரம் தொடர்பான தரங்களினை உறுதி செய்தல்

3. தேசிய அபிவிருத்திக்காக பொது நிருவாகத் துறையின் கொள்கைகளை வகுப்பதற்கு உதவும் வகையில் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஆராய்ச்சியை அடிப்படையாக் கொண்ட தகவல் மற்றும் கொள்கை பரிந்துரைகளை வழங்குவதனை உறுதி செய்தல்

4. பொது மக்களுக்கு கேந்திர திசைமுகப்படுத்தலுடன் கூடிய வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு அரச துறை நிறுவனங்களுக்கு அவற்றின் நிருவாக கட்டமைப்புக்கள், தந்திரோபாயங்கள், முறைமைகள், நடைமுறைகள் மற்றும் அவற்றிற்கான சூழலினை விருத்திசெய்யும் நோக்கில் அரச துறை அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பினை வழங்குதல்

5. நவீன தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட செயற்பாட்டு அமைப்பாக விளங்குதல்

# நோக்கங்களும் குறிக்கோள்களும்

A — அரசதுறை ஊழியர்களுக்கு அவர்கள் தமது கடமைளை வினைத்திறனுடன் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான அறிவுத் திறன்கள் மற்றும் நடத்தைசார் மாற்றங்களுக்காக பயிற்சியளித்தலின் மூலமாக விருத்தி செய்தல்

B — முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகத் துறையில் பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கு செய்தல்

C — நிறுவனத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பில் சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்

D — அரச சேவையின் அனைத்து மட்டங்களிலும் வினைத்திறன் வாய்ந்ததும் பயனுறுதி வாய்ந்ததுமான நிருவாகத்தினை உறுதி செய்வதற்காக மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆதரவு பதவியணியினரின் தகமைகளை விருத்திசெய்தல்.

E — முகாமைத்துவத்தின் பல்வேறு தொழிற்பாட்டுப் பகுதிகளில் ஆலோசனைகள் மற்றும் உசாத்துணைகள் மற்றும் விசேட ஒப்படைகளுக்காக நிபுணர்களின் சேவையை அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் வழங்குதல்.

F — அரச துறை நிறுவனங்களுக்கு அவற்றின் நிறுவனசார் முகாமைத்துவ முறைமையினை மீளாய்வு செய்வதிலும் மேம்படுத்துவதிலும் உதவியளித்தல்

G — ஆலோசனை ஒப்படைகளை பொறுப்பேற்றல்

H — விமர்சன ரீதியிலான மதிப்பீடுகளுக்காகவும் முகாமைத்துவ, நிறுவன எண்ணக்கருக்களுக்கான பிரயோகங்கள், பொது நிருவாக முறைமைகளின் நவீன மயப்படுத்தல்களுக்கான ஏற்பாடுகளை வழங்குதல்

I — அரச நிறுவனங்களின் முகாமைத்துவ அபிவிருத்தி, வேலை நியமங்கள், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் பொது நிருவாக நிறுவனங்களின் உற்பத்தி வினைத்திறனை அதிகரித்துக் கொள்ளும் வகையில் உதவியளித்தல்

J — செயற்பாட்டு ரீதியாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிறுவனங்களோடு ஒன்றிணைந்து குழுக்களுக்கும் தனிநபர்களுக்கும் முகாமைத்துவ பயிற்சி நெறிகள், ஆராய்ச்சியும் அது தொடர்பான செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

K — பொருத்தமான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் மாநாடுகளில் நிறுவனத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்

L — தேவையான சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உதவுகையுடன் முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம் தொடர்பான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதலும், புத்தகங்கள், சஞ்சிகைகளை வெளியீடு செய்தலும், அவற்றிற்கு உதவுதலும்

M — பொது மக்கள் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு நிறுவன செயற்பாடுகள் மற்றும் பணிகள்தொடர்பான தகவல்களை வழங்குதல்

# 03 – ஆளுனர் சபை அங்கத்தவர்கள்

1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. இலஙகை அபிவிருத்தி நிருவாக நிறுவக சட்டத்தின் 6(1) ஆம் பிரிவுக்கமைய கௌரவ பொது நிருவாக அமைச்சரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் 2011 ஆம் ஆண்டுக்கான ஆளுனர் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்

**திரு.பீ.பி.அபேகோன்**
செயலாளர், பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு (தலைவர்)

**திரு.சிறிசேன அமசேகர**
பிரதமரின் செயாலாளர், அங்கத்தவர்

**திரு.பீ.பி. ஜயசுந்தர**
செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு அங்கத்தவர்

**திரு.பீ.அபேசேகர**
திறைசேரியின் பிரதி செயலாளர் அங்கத்தவர்

**கலாநிதி. நிஹால் ஜயதிலக**
செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அங்கத்தவர்

**கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன**
செயலாளர், உயர் கல்வி அமைச்சு அங்கத்தவர்

**திரு.கே.வி.பீ. ரஞ்சித் டீ சில்வா**
செயலாளர், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு

**திரு.சுமல் பெரேரா**
உறுப்பினர்

**திருமதி.எம்.எம்.பிரேமரத்ன**
உறுப்பினர்

**திரு. நிஹால் கிரியல்ல**
உறுப்பினர்

**திரு.பீ.விஜயரத்ன**
பணிப்பாளர்/இஅநிநி 2011.01.11 இலிருந்து இன்று வரை அங்கத்தவர்
உறுப்பினர்

பணிப்பாளர் சபையானது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிகளை மேற்பார்வை செய்து அதன் தொழிற்பாட்டுக்கு கொள்கை அடிப்படையிலான வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

# 04 – சிரேஸ்ட முகாமைத்துவமும் பீடமும்

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிருவாகத்தில் இளமாணி பட்டம், முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்புளோமா (ஜயவர்தனபுர), பொது நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் (ஜயவர்தனபுர), ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் பட்டம் (மீன்பிடிக் கொள்கை மற்றும் திட்டமிடல்), பொது நிருவாக சான்றிதழ் பாடநெறி, இஅநிறி , இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.பீ.விஜேரத்ன,**
**பணிப்பாளர்**



விஞ்ஞான இளமாணி (கௌரவ) அரச நிதி மற்றும் வரிவிதிப்பு, பொருளியலில் முதுமாணி (New England, Australia), இஅநிறி/ - ஜன-நவம்,2007, இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.ரி.எம்.கே.ஆர்.தென்னக்கோன்**
**மேலதிக பணிப்பாளர் (பயிற்சியளித்தல், முகாமைத்துவ உசாவுதல்கள்)**



வர்த்தகமாணி (விசேடம்) வரத்தக நிருவாக முதுமாணி (மனிதவள அபிவிருத்தி), விஞ்ஞானமாணி – வரி விதிப்பு மற்றும் அரச கொள்கை , பொருளியல் அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின்படிப்பு மற்றும் வரி விதிப்பு தொடர்பான பயிலுனர் வேலைத்திட்டம் (தேசிய வரி விதிப்புக் கல்லூரி, யப்பான்), இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.கே.டி.என்.ஆர்.அசோக**
**மேலதிக பணிப்பாளர்**
**(நிருவாகம் மற்றும் நிதி)**



கல்விமாணி (கௌரவம்) கொழும்பு, சந்தைப்படுத்தலில் விஞ்ஞானி முதுமாணி (இஸ்ராஜ் கிளைட் வர்த்தக கல்லூரி, கிளாஸ்கோ, ஐக்கிய இராச்சியம்) சட்டத்தரணி எம்ஐஎம்.(இலங்கை)
ஆர்வம் காண்பிக்கும் துறைகள், புலமைச் சொத்து, மனித உரிமை நிருவாகச்சட்டம், ஒழுக்காற்று பீட நடவடிக்கைகள், சந்தைப்படுத்தலுக்கான திறமை மற்றும் புதியஅரச முகாமைத்துவம், ஊழல் ஒழிப்புச் செயற்பாடுகள், வெளிநாட்டு அநுபவங்கள், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஜேர்மனி.

**திரு.டப்.ஏ.ஜயசுந்தர**
**சிரேஷ்ட உசாவுலர்**

**தலைவர், முகாமைத்துவ கற்கைகள் திணைக்களம்**



விஞ்ஞானமாணி (பொது நிருவாகம்) கௌரவம்), கணக்கியல் டிப்புளோமா, விஞ்ஞான முதுமாணி, வர்த்தக நிருவாகம், (பேர்மிங்ஹோம் பல்கலைக்கழகம்) (பேர்மிங்ஹோம் வர்த்தக கல்லூரி, ஐக்கிய இராச்சியம், PSLITD)

ஆர்வம் காண்பிக்கும் துறைகள், கூட்டுத்தாபன நிருவாகம், அரச தனியார் ,பங்குடமை, புதிய அரச முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் வியூகங்கள்,வெளிநாட்டு அநுபவங்கள், ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தியா, ஜேர்மனி, மற்றும் யப்பான்.

**திரு.எம்.திலகசிறி**
**சிரேஷ்ட உசாவுலர்**
**தலைவர், பட்டப்பின் படிப்பு கற்கைகள் கல்லூரி,**



கலைமாணி (கௌரவம்), அரசியல் விஞ்ஞானம், பேராதனைப் பல்கலைக்கழகம்,கொள்வனவு மற்றும் நிரம்பல் தொடர்பான டிப்புளோமா (NLL - UK) கலைமாணி (பால் மற்றும் சர்வதேச அபிவிருத்தி , வொரசிக், ஐக்கிய இராச்சியம், PGDDE – IGNOU இந்தியா, MISMM ( இலங்கை) விசேட தேர்ச்சி மற்றும் ஆர்வம் காண்பிக்கும் துறைகள், பால் அபிவிருத்தி மற்றும் பொருள் முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், தொலைக்கல்வி

**திரு.எம்.எஸ்.மெதகம**
**சிரஷ்ட உசாவுலர், தலைவர்,**
**தொலைக்கல்விக் கற்கைகள் நிலையம்**



கலை இளமாணி(பேராதனை பல்கலைக்கழகம்), பொது நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் (ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்), சமூக ஆராய்ச்சி முறைகளில் விஞ்ஞான முதுமாணி(ஐ.இ), ரீ சைட் வியாபார கல்லூரியில்(ஐ.இ.) கலாநிதி பட்டம், இநிசே வகுப்பு 1(ஓய்வு), எம்பிஎம் நிகழ்ச்சித்திட்டத்துக்கான சிரேஸ்ட உசாவுலர், இநிசே திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம், சிரேஸ்ட அரசாங்க அதிகாரிகளுக்கான பயிற்சியளித்தல் (வெளிநாடு)திட்டங்கள் மற்றும் பொது தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான ஒருங்கிணைப்பாளர். தொடர்ச்சியான மேம்படுத்தல் நடத்தைகள், நிறுவனசார் இணக்கப்பாடுகள், நிறுவனசார், குடியுரிமை நடத்தைகள், நிறுவனசார் கலாச்சாரம், அரச துறையில் நிறுவனசார் கற்றல் மற்றும் அறிவு புத்தாக்கம் மற்றும் செயல்நிறைவேற்ற மேம்பாடு என்பற்றில் ஈடுபாடு உடையவர். ஐக்கிய இராச்சியம், சுவிற்சலாந்து, தென்கொரியா, யப்பான், பெல்ஜியம், சீனா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

**காலநிதி.ஜே.டி.சமரசிங்க**
**சிரேஷ்ட உசாவுலர்**



இந்திய, மங்களூர் பல்கலைக்கழகத்தில் கலாநிதி (அபிவிருத்தி பொருளியல்) பட்டம், தாய்லாந்து IAT இல் பிராந்திய மற்றும் கிராமிய அபிவிருத்தி திட்டமிடலில் முதுமாணி, பட்டப்பின் படிப்பு டிப்புளோமா, கலை இளமாணி (விசேட) பொருளியலில்- களனி பல்கலைக்கழகம், இலங்கை நிருவாக சேவை விசேட தரம், அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிருவாகத்தில் விசேட கவனம். உத்தியோகபூர்வ பயிற்சிகளுக்காக சில வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.
இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.ஐ.எச்.கே.மஹநாம**
**சிரேஷ்ட உசாவுலர்**



பொது நிருவாக முதுமாணி (ஹவாட் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா) (FCMA – ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்) ஆர்வம் காண்பிக்கும் துறைகள், புள்ளிவிபரங்களின் அடிப்படையிலான வர்த்தக செயற்பாடுகளின் உபாயங்களைப் பயன்படுத்தி பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினம், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஆஜன்டீனா, நெதர்வாந்து, சிங்கப்பூர், யப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த வெளிநாட்டு அநுபவம்.

**திரு.எம்.ஈ.ஆறுமுகம்**
**சிரேஷ்ட உசாவுலர்**
**தலைவர்,**
**நிதி முகாமைத்துவ கேந்திரம்**



வர்த்தகப் பட்டதாரி (பேராதனைப் பல்கலைக்கழகம்) கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்புளோமா, ஐக்கிய இராச்சியம்.

**திருமதி.ஜே.சி.ரி.புலுமுல்ல**
**சிரேஷ்ட உசாவுலர்**
**தலைவர்,**
**பொது நிருவாக உள்ளூராட்சி நிலையம்**



ஐக்கிய இராச்சிய பேர்மிங் ஹாம் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டம், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைமாணி (கௌரவ), பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணி, இலங்கை நிருவாக சேவை வகுப்பு 1 , நல்லாட்சி முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தியில் சிரேஸ்ட உசாவுலர், சமூக சந்தைப்படுத்தல் மற்றும் மனித வள அபிவிருத்தியில் சிரேஸ்ட உசாவுலர், சமூக சந்தைப்படுத்தல் இலஞ்ச ஒழிப்பு, ஊடக முகாமைத்துவம் , நிருவாக ஆட்சி முறை ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்.ஐக்கிய இராச்சியம், அமரிக்கா, யப்பான், கொரியா, இந்தியா, சீனா, தாய்லாந்து, மலேசியா மற்றும் பங்களாதேஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.
இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**செல்வி.பி.ஜி.டி.**
**பி. சேரசிங்க**
சிரேஸ்ட உசாவுலர்



முதுகலைமாணி(பொருளியல்)- அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், கலை இளமாணி (விசேட) பொருளியல், ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், மனிதவள முகாமைத்துவத்தில் டிப்புளோமா, சட்டத்தரணி, முதுகலைமாணி (பொருளியல்),அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், மனிதவள முகாமைத்துவத்தில் டிப்புளோமா, சட்டத்தரணி. பொருளாதார அபிவிருத்தி, அபிவிருத்தி கொள்கை, தந்திரோபாய முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல், உற்பத்தி திறன் மற்றும் தரம், மொத்த தர முகாமைத்துவம், தலைமைத்துவம், நேரிடை பண்புகள் மற்றும் தனிநபர் விருத்தி ஆகிய துறைகளில் ஈடுபாடு உடையவர். அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, தாய்லாந்து, இத்தாலி, இந்தியா, யப்பான், பிலிப்பைன்ஸ், கொரியா, மற்றும் சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட உறுப்பினர்.

இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.டி**
**.வி.பந்துலசேன**
**சிரேஷ்ட உசாவுலர்**



சமூகவியலில் கலை இளமாணி மற்றும் முதுமாணி(யுஎஸ்பி), உற்பத்திதிறன் மற்றும் தரம், தந்திரோபாய முகாமைத்துவம், தனிநபர்/சுய விருத்தி, சிறிய நடுத்தர தொழில்முயற்சி வியாபார முகாமைத்துவம், தொழில்முயற்சிஅபிவிருத்தி, அரச துறை சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் ஆர்வமுடையவர். சிங்கப்பூர், யப்பான், சுவீடன், இஸ்ரேல், இந்தியா, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட உறுப்பினர்.
இலங்கை நிருவாக சேவை விசேட நிலையம்

**திரு.சுஜான் நாணயக்கார**
**சிரேஷ்ட உசாவுலர்.**



கலைமாணி (கௌரவ புவியியல்), கொழும்பு பல்கலைக்கழகம், நகர சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி, AIT தாய்லாந்து, ஜேர்மனி, நேபாளம், சுவீடன்,தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த வெளிநாட்டு அநுபவம்

**செயற்திட்ட முகாமைத்துவம், ஆராய்ச்சி முறைகள் மற்றும் நகர நகர அபிவிருத்தி தொடர்பான ஆலோசகர்**



விஞ்ஞானமாணி(கௌரவம்), விவசாயம், பேராதனைப் பல்கலைக்கழகம், சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் (CDG – ஜேர்மனி), விஞ்ஞான முதுமாணி சுற்றாடல் பொருளியல், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் பேராதனை, விசேட பிற்சி மற்றும் ஆர்வம் காட்டும் துறைகள், சுற்றாடல் முகாமைத்துவம், செயற்திட்ட முகாமைத்துவம், பால் சூழ்நிலை நிருவாக முகாமைத்துவம் (Incident Command System) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி முறைகள் மற்றும் அமெரிக்கா, ஜேர்மனி, நேபாளம் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கான வெளிநாட்டு விஜயம்.

**திருமதி.என்ஜே.ஜயசுந்தர**
**முகாமைத்துவத்துவ உசாவுலர்**



விஞ்ஞானமாணி (ஜயவர்தன பல்கலைக்கழகம்), விஞ்ஞான முதுமாணி (ஜயவர்தன பல்கலைக்கழகம்), விஞ்ஞான முதுமாணி (தகவல் தொழில்நுட்பம் மொரட்டுவ) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ், இ.அரசியலமைப்பு தொடர்பான சான்றிதழ், Local Area Network தொடர்பான சான்றிதழ், விசேட ஆர்வம் காட்டும் விடய்ஙக்ள தொடர்பான சான்றிதழ், இ. அரசியல் தொழில்நுட்பம், இணைய தளத்தை திட்டமிடல், வலையமைப்பு முகாமைத்துவம் மற்றும் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கான வெளிநாட்டு விஜயம்.),

**திரு.என்.எம்.எஸ் பண்டார**
**உசாவுலர்**



கலை இளமாணி(களனி), விஞ்ஞான முதுமாணி (நெதர்லாந்து), TESP (மான்செஸ்ரர்) இல் பட்டப்பின் படிப்பு, ELT(கொழும்பு பல்கலைக்கழகம்) இல் பட்டப்பின் படிப்பு, பயிற்றப்பட்ட ஆங்கில நிபுணர் (பேராதனை), ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, ஒஸ்ரியா, மலேசியா, சீனா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

திரு.ஐ.எஸ். ஜயரத்ன,
உசாவுலர் தரம் 1
தலைவர், மொழிக் கற்கைகள் நிலையம்,



கலைமாணி (கௌரவ) ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்பின் படிப்பு டிப்புளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்), பொருளியலில் முதுமாணிப்பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்) பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆங்கிலம்), கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்புளோமா, ஆர்வமுள்ள துறைகள் – பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, தந்திரோபா எண்ணக்கரு அபிவிருத்தி, கல்வி சார் ஆலோசனைகளும் ஆங்கில இலக்கியமும்.

**செல்வி.எஸ். ஆர்.எஸ். என்.சுதசிங்க**
**உசாவுலர்**



சர்வதேச உறவுகளில் கலை இளமாணி(கொழும்பு பல்கலைக்கழகம்), சமாதானமும் இன முரண்பாடுகளிலும் முதுமாணிப் பட்டம் (ஓஸ்லோ, நோர்வே பல்கலைக்கழகம்), ஆர்வமுள்ள துறைகள் – சர்வதேச உறவுகள், சமாதானமும் ஆராய்ச்சி முறையும். நோர்வே, சுவீடன், ஐக்கிய இராச்சியம் அகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

**செல்வி.எம்.ஆர்.வகும்புர.**
**உசாவுலர்**



மனிதவள அபிவிருத்தி மற்றும் செயல் நிறவேற்று முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணி, (லிகெஸ்ரர் பல்கலைக்கழகம், ஐ.இ.) சர்வதேச வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணி (அவுஸ்திரேலியா), சந்தைப்படுத்தலில் தொழில்சார் டிப்புளோமா (ACIM –UK), முகாமைத்துவ கணக்கியலில் டிப்புளோமா(CIMA - UK), மனித வள அபிவிருத்தி ஆராய்ச்சி, முதியோர் கற்றல் மற்றும் தொடர்பாடலில் ஆர்வம் உள்ளவர்.

**திரு.பி.டி.ஹெட்டியாராச்சி**
**உசாவுலர்**



# நிருவாகம், நிதி, தகவல் முறைமைகள் மற்றும் சேவைகள் பிரிவு

- விஞ்ஞானமாணி (முகாமைத்துவம்) (கௌரவ) (ஜயவர்தன புர பல்கலைக்கழகம்), கல்வி டிப்புளோமா, இலங்கை நிருவாக சேவை

**திரு.ஏ.எச்.எல்.எல். அபேரத்ன**
பிரதிப் பணிப்பாளர்



- வர்த்தக மாணி(விசேடம்) இலங்கை கணக்காளர் சேவை

திரு. பி.டி.லால் குணரத்ன
கணக்காளர்



விஞ்ஞானமாணி (சிறப்பு)

கைத்தொழில், கணிதம் தொடர்பான பட்டப்பின் படிப்பு

திருமதி.ஆர்.ஏ.எஸ்.பி.ரணவீர
பதிவாளர்



# 05 – பணிப்பாளரின் அறிக்கை - 2011

*இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது அரசாங்க துறையிலுள்ள நிறைவேற்று தர உத்தியோகத்தர்களின் ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்கான பொறுப்புணர்ச்சியுடன் கூடிய மேலான பொதுச்சேவையினை வழங்குவதற்கான நிலையமாக விளங்கி வருகின்றது. இந்த முயற்சியில் நிறுவகமானது ஏனைய அரச துறை நிறுவனங்களுடன் மிக நெருங்கி பணியாற்றி வருவதுடன் அவற்றின் உத்தயோகத்தர்களுக்கான பயிற்சியளிக்கும் நிறுவகமாக மட்டும் தொழிற்படாமல் மூலவளங்களின் களஞ்சியமாகவும் சேவையாற்றி வருகின்றது.*

*SLIDA 2011 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த செயற்றிட்டத்தில் உபாய வழிமுறைகளுடன் சிறப்பாக செயற்பட்டு வருவதுடன் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சாதனைகளில் உயர்ந்த பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது.*

*நிதிசார் அடைவுகளில் SLIDA ஆனது2010 இல் நிதியீட்டமான ரூபா 80.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 106.5 மில்லியனை தொழிற்பாட்டு வருமானமாக சம்பாதித்துள்ளது. தேய்மானத்தின் பின்னர் தேறிய மிகையானது ரூபா 0.64 மில்லியனாக இருந்துள்ளது.*

*நிறுவனத்தினால் 91 பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இது 2010 இல் 59 ஆக இருந்துள்ளதுடன் 2010 இல் 28534 இலில் இருந்த பங்குபற்றுனர்களின் எண்ணிக்கையானது 2011 இல் 38,706 இற்கு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், இந்த அதிகரிப்பானது பிரதானமாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான உசாவுதல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாகவே ஏற்பட்டதாகும்.*

*ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கப்பால், 2011 இல் இலங்கை நிருவாக சேவை வகுப்பு 111 இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் புதியதோர் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவான நோக்கமாக பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் வகையில் அறிவு, திறன்கள் மற்றும் அவர்களின் மனப்பாங்கு ஆகியவற்றினை வளர்த்தெடுக்கும் வகையில் விருத்தி செய்வதும் அதேபோல் அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளின் ஆரம்பித்தல்களை மேற்கொள்வதுமேயாகும். இவ்வாறான மூன்று வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டங்களில் ஏறக்குறைய 197 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் தொழில்சார் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையினை சிறந்த நிலைக்குக் கொண்டுவரும் வகையில் அவர்களுக்குப் பரந்துபட்ட அனுபவத்தினைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலான பல்வேறுபட்ட செயல்முறை அமர்வுகளுக்கும் தெரிவு செய்யப்பட்டார்கள்.*

SLIDA ஆனது திறைசேரியினால் வழங்கப்படும் மானியத்தில் பகுதியளவிலும் 2008 ஆம் ஆண்டிலிருந்தான அதன் பெறுகைகளிலிருந்து 22% இற்கும் 35% இற்குமிடையிலான பகுதியிலும் சார்ந்துள்ளது. SLIDA ஆனது நிதிசார் இடைவெளியினை நிரப்பும்நோக்குடன் அரசாங்க துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கான பயிற்சியளித்தல் மற்றும் உசாவுதல் நிகழ்ச்சித்திட்டங்ளை நடாத்தி வருகின்றது. அதற்கமைவாக 91 பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் 43 பயிற்சியளித்தல் உசாவுதல்களும் நடாத்தப்பட்டன. முன்னைய ஆண்டுடன் (2010) ஒப்பிடு கையில் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 32 இனாலும் உசாவுதல் நிகழச்சித்திட்ங்கள் 5 இனாலும் அதிகரித்துள்ளன. இதற்கும் மேலாக, குறித்த ஆண்டு காலப்பகுதியில் நடாத்டதப்பட்ட வெளிவாரி பரீட்சைகளும் அதிகரித்துள்ளதுடன் 2010 இல் 77 ஆக இருந்தவை 2011 இல் 84 இற்கு அதிகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புள்ளிவிபரங்களைப் பகுப்பாய்வு செய்யும் போது குறித்த ஆண்டு காலப்பகுதியில் SLIDA பதவியினரில் 146 மானோருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட விசேட தகுதி காண் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மேலுமொரு 433 மான இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது 219 பங்குபற்றாளர்களுடன் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவதுடன் மேலும் 120 பேர் 2011/2013 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பொதுநலவாய நாடுகளின் செயலகம், சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சு, இந்தியாவைச் சேர்ந்த நிருவாக பதவியினர் கல்லூரி ஆகியவற்றின் கூட்டிணைவுடன் அரசாங்க சேவையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களில் தெரிவு செய்யப்பட்ட குழுவிற்கான விசேட தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது அதன் தேவைப்பாடுகளிலும் பார்க்க குறைந்தளவிலான 11 உசாவுலர்களின் பங்களிப்புடன் தனது பயணத்தினை சீராக மேற்கொண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் 02 புதிய உசாவுலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் இன்னமும் 18 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. வருட இறுதியில் மேலதிக பணிப்பாளர் பதவியொன்றிற்கான வெற்றிடமும் காணப்பட்டது.

*வழங்கல் பகுதியினை ஸ்திரப்படுத்தும் அதேவேளையில், மேன்மை மிக்க நிலையமாக ஸ்திரப்படுத்துவதற்கான தொழில்சார் பயிற்சியளித்தல் நியமங்களை நிறைவேற்றுவதில் பாதகமாக விளங்குகின்ற உள்ளக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்வருவன அத்தகைய நடவடிக்கைகளும் விரிவாக்கல்களுமாகும்.*

*இஅநிநி இன் வாகன தரிப்பிடத்தில் தரை ஓடுகளைப் பதித்தல், இஅநிநி இன் விடுதி தொகுதியினை திருத்துதலும் மேம்படுத்துதலும் (16 கழிவறைகள் புதுப்பிக்கப்பட்டன) வடிவமைப்பு உள்ளடங்கலான இஅநிநி இன் சிற்றுண்டிச்சாலை மீதி வேலைகளை நிருமாணித்தலும் பூர்த்தி செய்தலும், தளபாடங்களைப் பொருத்துதல் (விடுதிகள் மற்றும் விரிவுரை அறைகள்), பிரதான கேட்போர் கூடத்திற்கான உள்ளக மேம்படுத்தல்கள், விரிவுரை மண்டபம் மற்றும் விரிவுரை அறைகள் வடிமைப்பு (17 அறைகள்), பிரதான மற்றும் மினி விரிவுரை மண்டபம், உணவருந்தும் அறைகள் மற்றும் விரிவுரை அறைகளுக்கு தளபாடங்களைப் பொருத்துதல் (14 அறைகள்), கணனி பிறின்ரர்களின் கொள்வனவு (05), பிரதான கட்டிட கழிவறைகளைப் புதுப்பித்தல் (08), கழிவு நீர் வாயக்கால்களைப் பொருத்துதல் மற்றும் வாகன தரிப்பிட நிருமாணம் ஆகியன மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் மேறகொள்ளப்பட்டிருந்தன. ஆராய்ச்சி முறைகள், உசாத்துணைப் பகுதியில் "இலங்கையின் தொகுப்பு" எனும் தலைப்பில் பொது நிருவாகப் பிரிவிலுள்ள உத்தயோகத்தர்களின் நூல்களின் தொகுப்பினைப் பேணுதல், இஅநிநி இல் நூலகத்திற்கான இணையத்தளத்தினை விருத்தி செய்தல், உசாத்துணைக்கான அவர்களது தேடுதல்களுக்கு உதவியளிப்பதற்கான குறிப்பேட்டுக்கான துணைப் பொருட்களினை வழங்குதல், தன்னியக்க இரவல் வழங்கும் முறையினை அறிமுகப்படுத்துதல், மொனாஸ் பல்லைகழகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட புத்தகங்களுக்காக விசேட புத்தக அடுக்குகளை தயாரித்தல் ஆகியனவும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.*

*இச் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய கௌரவ பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கட்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் செயலாளருக்கும் தேசிய நிருவாக மறுசீரமைப்பு பேரவைக்கும் மற்றும் ஏனைய அக்கறைதாரர்களுக்கும் இவ்விடத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது மிகவும் பொருத்தமாகும்.*

*இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது நிருவாக நடவடிக்கைகளுக்கான அதி சிறந்த முறைமைகள் மற்றும் மூல வளங்களினைப் பின்பற்றியுள்ளதுடன் பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு நடாத்தப்பட்டுள்ளது.*

*இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினை அரச துறையின் பயிற்சி மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான அதி சிறந்த நிறுவகமாக மாற்றிமைக்கும் வகையில், ஆசியாவின் ஆச்சரியம் மிக்க புதிய தேசமொன்றாக மாற்றியமைக்கும் நோக்குடன் பாரிய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. பயனாளிகளுக்கு மிகச் சிறந்த அக்கறையுடையதும் சகல வளங்களைக் கொண்டதுமான அரச சேவை வழங்கும் நிறுவனமாக மாற்றியமைப்பதற்காக இதன் வெளிப்புறச் செயற்பாடுகள் மாத்திரமன்றி சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புடையோரின் அறிவு, சிந்தனை மற்றும் திறமைகள் என்பவற்றினையும் விருத்தி செய்வது கட்டாயமானதாகும். இதனால் எனது அணுகுமுறைக்கமைய தொடக்கநிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அதன் மூலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது தனியே சேவை வழங்கும் நிறுவனமாக மட்டும் விளங்காது உயரிய வளவாளர் மத்திய நிலையமாகவும் மாற்றம் பெற முடியும்.*

*இறுதியாக, 2011 ஆம் ஆண்டில் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்காக பணிப்பாளர் சபைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் வருடம் பூராகவும் தமது ஒத்துழைப்பினை நல்கிய விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*பீ.விஜயரத்ன*
*பணிப்பாளர்*
*இஅநிநி*

# 06 - அறிமுகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது (இஅநிநி) நாட்டின் அரச துறையின் திறன்களைக் கட்டயெழுப்புவதற்கான முன்னணி வாய்ந்த நிறுவகமாக 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதாகும். இஅநிநி, அரச துறை முகாமையாளர்களின் தகுதி வாய்ந்த தன்மையினை விருத்தி செய்தல் மற்றும் அரசதுறை நிறுவனங்களின் செயற்பாட்டினை விரிவாக்குகின்ற சட்டவாக்கத்தினூடாக வலுவூட்டப்பட்டுள்ளது

இஅநிநி இன் பிரதான தொழிற்பாடு, தேசத்திற்கு தரமுயர்ந்த பொதுச் சேவையினை வழங்குவதற்காக அரசாங்க முகாமைத்துவ சேவையின் அனைத்து மட்டங்களிலுமுள்ள உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை விரிவாக்குதேயாகும். அத்துடன் இஅநிநி ஆனது அரசாங்க துறையின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்கும் நோக்குடன் முகாமைத்துவ உசாவுதல் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கொள்கை பகுப்பாய்வு ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றது. இஅநிநி ஆனது நாட்டின் மாறி வரும் மனித வள அபிவிருத்தித் தேவைவைகளுக்கேற்ப வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த சேவைகளை கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக வழங்கி வருகின்றது.

இஅநிநி இனால் வழங்கி வருகின்ற சேவைகள் மற்றும் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

| |
|---|
| அறிமுக பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் (பகுதியளவில் செலவினை மீள வழங்கும் அடிப்படையில்) |
| நடுத்தர மட்ட உசாவுதலகளுக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் (பகுதியளவில் செலவினை மீள வழங்கும் அடிப்படையில்) |
| நிரல்படுத்தப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சத்திட்டங்கள் (மத்திய அரசாங்க அமைச்சு மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக) ) |
| நிரல்படுத்தப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சத்திட்டங்கள் (கட்டணம் மீளளிக்கப்படும் முறையில்) |
| பயிற்சி மற்றும் முகாமைத்துவ உசாவுதல் சேவைகள் (கட்டணம் மீளளிக்கப்படும் முறையில்) |

## 07 – இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிருவாக கட்டமைப்பு




LG&DMS : உள்ளூராட்சி மற்றும் முகாமைத்துவ கற்கைகள் நிலையம்
SPS : பட்டப்பின் படிப்பு கல்லூரி
MS : முகாமைத்துவ கற்கைகள்
RP&PS : ஆராய்ச்சி மற்றும் கொள்கை கற்கைகள்
A.O : நிருவாக உத்தியோகத்தர்
P.O : நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்

# 08 – இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் கிடைக்கப்பெறக் கூடிய பௌதீக மூலவளங்கள்

பங்குபற்றுனர்களுக்கு சிறந்த கற்றல் சூழலினை வழங்கும் பொருட்டு இஅநிநி ஆனது அனைத்து விரிவுரை மண்டபங்களுக்கும் நவீன வசதிகளை வழங்கியுள்ளது. அத்தகைய 18 வகுப்பறைகளுக்கு குளிரூட்டி வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இத்தகைய விரிவுரை அறைகளுக்கு நவீன கட்புல செவிப்பு உபகரண வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.







நிறுவகத்தின் பிரதான கேட்போர் கூடம் சுமார் 150 பங்கு பற்றுனர்களுக்கான ஆசன வசதிகளைக் கொண்டுள்ளது. இந்த கேட்போர் கூடமானது இரண்டு உரைபெயர்ப்பு அறைகளைக் கொண்டுள்ளதுடன் ஒரே நேரத்தில் உரைபெயர்ப்பு செய்யக்கூடிய வசதிகளையும் 40 பேர்களுக்கான மாநாட்டு வசதிகளையும் கொண்டுள்ளது. நிரந்தரமாக பொருத்தப்பட்ட தொடர்பு சாதன முறைமையொன்றும் இங்கே உள்ளது. பல் ஊடக வசதிகள் போன்ற ஏனைய உபகரண வசதிகளும் இங்கே உள்ளன.

வதிவிட பங்குபற்றுனர்களுக் தமது ஓய்வு நேரங்கைளை பயனாக்கி கொள்வதற்காக தொலைக்காட்சி கூடம் வசதியளிக்கின்றது.





பாடநெறிகைளத் தொடருகின்ற பயிலுனர்களின் பாவனைக்கென தங்கு விடுதியின் நிலத்தளத்தில் உணவருந்தும் மண்டப வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது. இது நெரிசல் நேரத்தில் இட நெருக்கடியினை தவிர்ப்பதற்கு பெரிதும் உதவுகின்றது.

இஅநிநி ஆனது கொழும்புக்கு வெளியிலிருந்தான பங்குபற்றுனர்களுக்கும் கற்பித்தல் வசதிகளை வழங்கி வருவதனால் கட்டண அடிப்படையிலான தங்குமிட வசதிகளும் உள்ளன. தற்போது, இங்கே முழுமையான வசதிகளுடன் கூடிய 60 தனிப்பட்ட அறைகளும் 6 கூட்டு அறைகளும் (ஒவ்வொன்றிலும் 6 கட்டில்கள்) உள்ளன. இதற்கும் மேலாக, குளிரூட்டப்பட்ட 4 கூட்டு அறைகளும் உள்ளன. இத்தகைய அறைகளுக்கு அறவிடப்படும் கட்டணமானது சந்தையில் தற்போது நிலவும் கட்டணங்களிலும் பார்க்க மிகவும் குறைவாகும்.





நிறுவகத்தின் வாகனங்களுக்கும் பாநெறிகளில் பங்குபற்றுனர்களின் வாகனங்களுக்குமான தரிப்பிட வசதிகள் இஅநிநி இன் வளவினுள்ளேயே உள்ளது. உயர் குடியிருப்பு பகுதியினைக் கொண்ட இப்பிரதேசத்தில் கட்டணமெதுவுமின்றி தரிப்பிட வசதி வழங்கப்பட்டமை குறித்து பங்குபற்றுனர்கள் பெரிதும் மெச்சியுள்ளார்கள்.

இஅநிநி இன் நூலகமானது மிகச் சிறந்த நூல்களின் தொகுப்பினைக் கொண்டுள்ளதுடன் 110 இற்கும் மேற்பட்ட முகாமைத்துவ கற்கை நெறிகளுடன் கூடிய பருவகால வெளியிடுகளைக் கொண்டுள்ளது. நூலகமானது மாறுபடும் தேவைகளுக்கேற்ற வகையில் தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.



# இஅதிதி இள் தந்திரோபாய மீளாய்வு

# 09 இஅதிதி இள் தந்திரோபாய மீளாய்வு

## 9.1 லைமைசார் கணக்காய்வும் உள்ளார்ந்தமும்

இஅநிநி இன் தற்போதைய பணிப்பாளர், திரு.பீ.விஜயரத்ன அவர்களின் தலைமையின் கீழ் நிறுவனத்தினை முன்னேற்றுவதற்கும் அதன் மூலமாக வழங்கப்படுகின்ற சேவைகளை சர்வதேச நியமங்களுக்கமைவாக வழங்குவதிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அடுத்துவரும் 5 வருட காலப்பகுதியில், பிராந்தியத்தினதும் சர்வதேச தரப்படுத்தலினதும் மிகவும் மேன்மை மிக்க பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்திக்கான மையமாக விளங்குதல் வேண்டுமென்ற நோக்கமானது நிச்சயமாக அடையப்பெறும். மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்தமானது முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து எங்களது முன்னேற்றகரமான அபிவிருத்தி காலப்பகுதியில், நிறுவகமானது அதன் சேவை உற்பத்திகளை உண்மையான உலக மட்டத்திலான நியமங்களுக்கமைவாக சாதகமான முறையில் விருத்தியடையச் செய்துள்ளது.

SWOT மரபு ரீதியான பகுப்பாய்வானது கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அது முன்னைய ஒருங்கிணைந்த திட்டத்தில் வடிமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களினை ஒருவர் அவதானிப்பாராயின் இஅநிநி இன் பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றின் மாறிலிகள் ஒரே மாதிரியாக தொடர்ந்தும் இருந்து வந்துள்ளதைக் காணலாம். இன்றும் கூட "மேன்மை" இனை அடைவதில் மிகப்பெரிய தடையாக இருப்பது நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பும் வழங்குகையுமேயாகும்.

கடந்த கால மற்றும் நிகழ் கால சூழல் காரணிகளில் தாக்கத்தை உண்டுபண்ணிய காரணிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன;

அரசாங்க துறையினுள் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்திக்கான மத்திய நிறுவகமாக விளங்குகின்ற இஅநிநி இன் தற்போதைய தலைமைத்துவம், அரசாங்க ஆதரவு சட்ட மூலம் மூலமான அமைப்பு என்பன அத்தகைய வாய்ப்புக்களின் உணர்வு பூர்வமானதாக இருக்கும். உள்ளார்ந்ததும் எண்ணிக்கையற்றதுமான இஅநிநி இல் கிடைக்கக்கூடிய தகவல் மற்றும் மூலவள வலையமைப்பு என்பன பொது துறை முயற்சிகள், நிறுவனத்தின் மூலஸ்திர நிலையில் மீள் நிலையூட்டுதல் என்பவற்றில் செல்வாக்கு செலுத்துகின்றன. இருந்த போதிலும், மேம்படுத்தலுக்கான பகுதியான உள்ளக சேவை இயலுமை பருமாணங்களுக்கு சட்டமன்ற ஆதரவினூடாக வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க ஆற்றல் மற்றும் நிலையியல் சக்தி என்பவற்றினுடாக கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

கவனம் செலுத்தபட வேண்டியவற்றில் சில நிறுவகத்தின் தொழிற்பாட்டு தரத்தில் 80% இற்கும் மேல் செல்வாக்கு செலுத்துகின்றன;

- பொது மக்களை மையப்படுத்திய ஆற்றல்,பொறுப்புமிகு மற்றும் ஒருங்கிணைந்த தொழிற்பாட்டு மாதிரிகளை வழங்குதல்
- ஒருங்கிணைந்த உள்ளக செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டு மாதிரி என்பன நிறுவனத்தினை தாபிப்பதற்கும் சர்வதேச சேவைகள் மற்றும் தொழிற்பாட்டு நியமங்களுக்கு உதவியளிக்கும்

- ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனசார் தொழிற்பாட்டு முறையானது திணைக்களங்கள் மற்றும் சேவை தொழிற்பாடுகளின் செயற்பாட்டினை ஒருங்கிணைக்கின்ற குறுக்கு வெட்டினைப் பிரதிபலிக்கின்றது.

நிறுவனத்தின் தெரிவிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஏற்படுகின்ற தடைகள் மற்றும் இடையூறுகளை முக்கிய பகுதியின் பரிமாணங்களில் வேறுபட்ட தன்மையினை நிவர்த்தி செய்வதற்கான மேற்படி மூன்று விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. கவனத்தில் கொள்ளப்பட்ட இத்தகைய பகுதிகளின் கணிசமானளவு செல்வாகது காரணமாக இஅநிநி இன் சேவை வழங்கல் நியமங்களைக் கொண்டிருப்பதுடன் இல்லையெனில் குறிப்பிட்ட நிறுவனம் சூழலிருந்து கணிசமானளவு அச்சுறுத்தலை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

இலவசமாக வழங்கப்படுகின்ற பயிறிசியளித்தல் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் சிக்கலானதும் யதார்த்தமானதுமான அச்சுறுத்தலானது நாட்டின் வித்தியாசமான அனைத்துப் பகுதிகளின் பயிற்சியளித்தல் தேவை குறித்து விளக்கமளிப்பதற்கு சட்டமாக்கப்பட்டுள்ளது. சுயாதீன உசாவுதல்கள் மற்றும் உசாவுதல் நிறுவனங்களின் மீது மூலவளங்கள் தெரிவு செய்யப்படுவதன் மூலம் இஅநிநி இல் முதலீடு செய்யக்கூடியதாக இருந்திருக்கும். இஅநிநி இற்கு செலவாக செலுத்துவதற்கு ஒவ்வொரு அச்சுறுத்தல்கள் அரச துறை பயிற்சியளித்தலுக்கான மத்திய மற்றும் முதலாவது தெரிவு நிறுவனமாக அதன் அடிச்சுவட்டினை இழப்பதற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

மேற்படி வேறுபாடுகள் கடந்த காலங்களில் காணப்பட்டுள்ளதுடன் இத்தகைய அச்சுறுத்தல்களிலிருநது விடுபடுவதற்கும் மேற்கூறப்பட்ட பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் பிரச்சினையாக இருப்பதாக தெரிவிக்கபட்டது. தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுவதுடன் முற்றிலும் வேறுபட்ட வகையில் இஅநிநி இனால் எதிர்நோக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் பலவீனங்களிலிருந்து விடுபடுவதற்கான முன்னேற்றகரமான உபாயமொன்று இனங்காணப்பட்டுள்ளது

முற்றிலும் வேறுபட்ட வகையில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணக்கரு ரீதியான தொழிற்பாட்டு மாதிரிகளின் உபாய ரீதியான அமுலாக்கல் ஆகிய இரண்டும் எவ்வாறாயினும் இப்பிரிவுக்கு நினைவூட்டலாக காணப்படுகின்றது. ஆகையால் தொடர்ந்து வருகின்ற இத்தகைய நிலைமைகளினால் புதியதும் புத்தாக்கம் வாய்ந்ததுமான தீர்வு ஏற்பட்டுள்ளது. இத் உபாயத்தினை செயற்படுத்துவதன் நோக்கம், உறுதியான தொழிற்பாட்டு வேலை மற்றும் கணக்கீடு அடிப்படையிலான பெறுபேற்று சூழலினையும் சேவை மேன்மையும் உருவாக்குவதேயாகும்.

## 9.2 உள்ளார்ந்தம்

மனித வள அபிவிருத்திப் பிரிவானது புரிந்து கொண்டு பிரயோகிக்கப்படும் வழிமுறையினை நெறிப்படுத்துகின்றது. மனிதவள அபிவிருத்தி நெறிப்படுத்தலானது குறித்த சில விடயங்களுடன் புரிந்து கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவனங்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையிலும் தொழிலானமைக்கும் தொழிலானமைக்குமிடையிலும் நாட்டுக்கும் நாட்டுக்குமிடையிலும் கூறப்பட்ட விடய மாற்றங்களினைப் புரிந்து கொண்டு பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஆகையால் மனித வள அபிவிருத்தி நெறிப்படுத்தலானது மூலாதாரமாக பெறப்பட்ட விடயத்தில் உரைபெயர்ப்பதிலும் உணரப்படுவதிலும் தங்கியிருக்கின்றது.

**உள்ளார்ந்தம்:**இலங்கையானது, ஆற்றலும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமைத்துவத்தினூடாக உலகளவில் பொருளாதார ரீதியாவும், கலாச்சார முன்னேற்ற ரீதியாவும் மிகச் சிறந்த நாடாக விளங்குதல் வேண்டுமென்ற நோக்குடன் பரந்துபட்ட தேசிய இலக்கினை நோக்கிப் பயணிக்கின்றது. விசேடமாக, இந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக, கப்பல்துறை, விமானப்போக்குவரத்து, வர்த்தக, அறிவு மற்றும் வலு மூலங்களுக்கான கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கு தேசிய அளவிலான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இது மக்களின் நலன்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்துகின்றது. ஆகையால் அரச சேவையானது பொறுப்புணர்வு, மேற்கூறிய அபிவிருத்திக்கு தலைமை வகிப்பதில் பங்கு பெறுவதுடன் எமது மக்களுக்கு அவர்களின் நலன்களில் கூடியளவு அக்கறையும் செலுத்தப்பட்டு வருகின்றது.

**மனிதவள அபிவிருத்தி:** மேற்படி பணியினை நிறைவேற்றும் பொருட்டு நிலையான முன்னேற்றகரமான, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களை நோக்கிய அரசாங்க சேவை ஆகிய பல்வேறு காரணிகள் ஒன்றிணைய வேண்டும். இது நாட்டின் உபாய அபிவிருத்தி அல்லது நாட்டின் நிலையினை உயர்த்துவதனூடாக ஆசியாவின் ஆச்சரியமாக விளங்குவதற்கு அத்தகைய முயற்சியில் ஈடுபடுத்தப்படும் மனித **மூலதனத்தின் ஆற்றல், இயலுமை** ஆகியவற்றில் நிச்சயமாக தங்கியிருக்கின்றது. ஆகையால், அரச சேவையானது பொறுப்புணர்வு மற்றும் மேற்கூறிய அனைத்துக்கும் தலைமை வகிப்பதில்

பங்கு பெறுவதுடன் எமது மக்களுக்கு அவர்களின் நலன்களில் கூடியளவு அக்கறையும் செலுத்தப்பட்டு வருகின்றது. பிரதான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிடமிருந்து பொதுத்துறை நிருவாகத்தில் ஈடுபடுகின்ற நிருவாக உத்தியோகத்தர்களுக்கு இத்தகைய தனி நபர்களின் ஒன்று திரண்ட இயலுமையுடன் கூடிய ஆற்றல் மற்றும் ஊக்கங்கங்கள் ஆகியன இலங்கையை அதன் வரையப்பட்ட இலக்கினை அடைய முடியுமா? இல்லையா என்பதனை நேரடியாக தீர்மானிக்கும்.

**இஅநிநி:** இஅநிநி ஆனது அரச துறை அபிவிருத்தி சார்ந்த, முகாமைத்துவ உள்ளக கட்டமைப்பு ஆற்றல்களின் நியதிகளின்படியும் ஒரு முன்னணி வாய்ந்த நிறுவகமாகும். தற்போதுள்ள சூழ்நிலையில் இஅநிநி ஆனது அரச துறை நிறுவனங்கள் மற்றும் அதற்குத் தேவையான தகமைகளுடன் கூடிய ஊழியர்கள், முறைமைகள் மற்றும் பொதுமக்களை அடிப்படையாகக் கொண்ட சேவையினை வழங்குவதுடன் நாட்டின் நடுத்தரத்திலிருந்து நீண்ட கால இலக்கினை புரிந்து கொள்வதற்குத் தேவைப்படும் அறிவு, திறன்கள் ஆகியவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை ஆற்றுகின்றது. எவ்வாறாயினும், இது அதன் அளவினை விரிவாக்குவதற்கும் நிறுவனத்தின் தற்போதைய முயற்சிகளை தீவிரமாக்குவதற்கும் போதுமானதல்ல. இஅநிநி இன் தொழிற்பாட்டு வடிவில், கட்டமைப்புக்களில் மற்றும் சேவைகளில் தற்போதுள்ள அணுகுமுறை சவால்களை அடைவதில் **வடிவ மாற்றம்** தேவைப்படுகிறது.

தேசிய நோக்கினை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிருவாக உள்ளக கட்டமைப்பினைக் கொண்டிருக்கக்கூடிய நிறுவனத்தினை மேற்பார்வை செய்கின்ற பல்வேறு அக்கறைதாரர்களைக் கொண்டுள்ள சூழலில் தொழிற்படுகின்ற இஅநிநி ஆனது, கடந்த காலத்தில் உள்ளார்ந்ததின் பொதுவில் முறையற்றவை தொடர்பில் தற்போது மிகவும் தெளிவினை எற்படுத்துவதுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கவனமானது பொது மக்களின் நலன்களில் அதிகளவு அக்கறை காண்பிக்கும் அதவேளையில் நாட்டின் முன்னேற்றகரமான அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்கும் வகையிலான வெளிப்படையான அதிகாரமிக்க அரச துறை தொழில்முயற்சியாக நிலை நிறுத்துவதில் திரும்புகின்றது.

எவ்வாறாயினும், சவாலானது நிருவாக கட்டமைப்பினை (அனைத்து அரச நிருவாக நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்குரிய பதவியினர்) வலுப்படுத்தும் பொருட்டு குறித்த வடிவத்தின் நகர்வுத் தேவையானது இலக்கு குழுவின் மனப்பாங்கின்படியும் சிந்தனை வடிவங்களினபடியுமே இடம் பெறுகின்றது. அவ்வாறே, இஅநிநி ஆனது **அத்தகைய நகர்வினை உருவாக்குவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் தேவையான மனித வள அபிவிருத்தியினை எவ்வாறு வழங்குகின்றது,** என்பது தொடர்பில் பொய்யுரைக்கின்றது. மனிதவள அபிவிருத்தி நிறுவகம் என்றவகையில் இஅநிநி ஆனது தெரிவிக்கப்பட்ட தேசிய இலக்குகளை அடைவதற்குத் தேவையான **குறைந்த மீடிறனில்** தொழிற்படுவதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் திறன்களுடன் கூடிய தேசிய நிருவாக பணியினை நடைமுறைப்படுத்துவதற்கான மத்திய மையமாகவும் விளங்குகின்றது.

நடைமுறை தொழிற்பாட்டு சந்தரப்பமும் அரசாங்க துறை தொழில் முயற்சிகளில் பயன்படுத்தப்படுகின்ற இஅநிநி மாதிரி என்பன மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய தேசிய உள்ளார்ந்ததின் கேள்விகளை நிறைவேற்றுவதற்கு தவறியுள்ளன. இதற்குப் **பிரதானமாக இரண்டு காரணங்களைக்** குறிப்பிடலாம். முதலாவதாக, இருக்கின்ற இஅநிநி இல் ஒத்திசைவாக பயன்படுத்தப்படுகின்ற தொழிற்பாட்டு மாதிரி, பொதுமக்களின் சிறந்த அக்கறையில் என்ன பிரயோகிக்கப்படுகின்றதோ அல்லது என்ன கற்பிக்கப்படுகின்றதோ அதனை ஊகிப்பதற்கான தகவல்களில் தங்கியிருக்கின்ற அரச துறை நிறுவனங்களுடன் மட்டும் தொடர்புபடுகின்றது. பொது மக்களுடன் தொடர்புபடுவதிலிருந்து இஅநிநி ஆனது பயனுறுதியுடன் பாதுகாக்கப்படுகின்றது. இரண்டாவது, உறுதியான தகவலுக்கு இஅநிநி அணுகியுள்ள அடையப்பட வேண்டிய இம்மாதிரி மட்டும் அதிகூடிய வினைத்திறனுடன் விளங்குகின்றது. இஅநிநி இற்கு அரசாங்க துறை நிறுவனங்களினூடாக **மாற்றீடு இல்லாத** பாய்ச்சலினை எதிர்பார்க்கின்ற பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதனைக் குறிக்கின்றது. அரசாங்க துறை கலாச்சாரமானது இடம்பெறுவதற்கு மாற்றீடு அல்லாத தகவலுக்குப் போதுமான முதிர்ச்சியினை இன்னமும் கொண்டிருக்கவில்லை.

இஅநிநி தொழிற்படுத்துகின்ற தற்போதைய தொழிற்பாட்டு மாதிரி மற்றும் புதிய சந்தர்ப்பங்கள் ஆகியவற்றினை முரணாகப் புரிந்து கொள்ளலானது தொடர்ந்து வரும் பக்கங்களில் கலந்துரையாடப்படும் விடய முறைமையின் தற்போதைய ஒத்திசைவான தன்மையினை ஆய்வு செய்வதற்கு முக்கியமானதாகும்.

## 9.3 நடைமுறை தொழிற்பாட்டு மாதிரியும் சூழலும்

முறைமை ஒன்றின் மாதிரி வடிவினை நகர்த்தலினை உருவாக்குவதானது இலகுவாக மேற்கொள்ளப்படக்கூடிய விடயமல்ல. தேவைப்படும் மாதிரி வடிவ நகர்வினை புரிந்து கொள்ளும் பொருட்டு, ஒன்று தற்போதிருக்கும் மாதிரி வடிவினை முதலாவதாக புரிந்து கொள்ளுதல் வேண்டும் அந்த வகையில் தற்போது இஅநிநி தேவையினை நிறைவு செய்யும் **ஒரு வழி சூழலில்** தற்போது தொழிற்படுகின்றது.




கடந்த காலங்களில், இஅநிநி, நிறுவனம் என்ற வகையில் தனது பயிலுள்ர்களுடன் ஒரு வழி தொடர்பாடலினையே மேற்கொண்டு வந்துள்ளது. நிறுவனமானது, சிறியவிலான பகுப்பாய்வு அல்லது பயிற்சியளித்தல் தேவை பகுப்பாய்வின்றி, முதலீட்டிலிருந்து பெறப்படும் பிரதிபலனுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்காமல் அல்லது அது வழங்கிய பயிற்சி நெறிகளைப் பற்றிக் கண்டறியாமல் செயற்பட்டு வந்துள்ளது. நிறுவனமானது, **நாம் கற்பிக்கின்ற கற்கை நெறிகள் மிகச் சரியானது எள்றும் அதவே தற்கால பொதுத்துறை நிருவாக உத்தியோகத்தர்களின் தேவை** என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. இஅநிநி பயிலுனர்கள், அதிகமான கடந்தகால வரலாற்றில், புத்தி சாதுரியமற்ற வகையில் மிக இலகுவாக எவை கற்பிக்கப்பட்டதோ அவற்றினை கற்றுங் கொண்டு இறுதியில் மிகவும் பெறுமதி குறைவான சேர்வினையே இறுதி வாடிக்கையாளரான பொதுமக்களுக்கு வழங்கக் கூடியதாக இருந்தது. இம்முறைமை தவறான எவ்வாறான தவறான அணுகுமுறை என்பது கண்கூடானது. நிறுவனமானது பிரயோக நோக்கமற்ற பாடத்திட்டமான்றினை வலியுறுத்த பின் பங்குபற்றாளர்களுக்கு எவை கற்பிக்கப்பட்டதோ

அதில், அவர்களாக தமது பொதுமக்களுக்குத் தமது சேவைகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் எவ்வித பிரயோக பெறுமதிகளையும் காண முடியாத நிலை காணப்பட்டது. பொதுமக்கள் இது சம்பந்தமாக தெறிவாக இன்மையால், தாம் பெற்றுக் கொள்கின்ற சேவைகள் சம்பந்தமாக மிகக்குறைவான அல்லது எவ்வித பின்னூட்டங்களையும் பொதுத்துறை சேவைகள் சம்பந்தமான சேவைத்தர நியமங்களை பொதுத்துறை நிருவாக அனுமானங்களுக்கு வழங்கமுடியாத நிலைமையொன்று காணப்படுகின்றது

மனிதவள அபிவிருத்தி முன்னெடுப்புக்களின் முழுமையான செயல்முறை குறைவான பொருத்தப்பாட்டுடன் கருவாக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. இத்தவறான செயற்பாட்டு அணுகுமுறை நிறுவனம் என்றவகையில், உருவாக்கப்பட்ட பெறுமதி மற்றும் தனது கற்றல் பங்காளிகளுக்கு வழங்கப்பட்ட பெறுமதி இறுதியில் வழங்கப்பட்ட பெறுமதி இறுதியில் பொது மக்களைச் சென்றடையும் போது குறைவடைகின்றது. ஆகவே, பயிற்சி நெறிகளின் வடிவமைப்பின் போது பிரயோக நோக்கல் காரணமாக கல்வி செயன்முறை, திறன்கள், மாற்றச் செயற்பாடு என்பன பாரம்பரிய முறைகளின் கீழ் இடம்பெறுவதால் பெறுமதி சேர்வை குறைவடைந்து இறுதியில் மிகக்குறைவான 1% அளவிலான பெறுமதி சேர்வையே இந்நாட்டின் பிரஜைகளான இறுதி நுகர்வோரினை சென்றடைகின்றது.




**10% பெறப்பட்ட விழுமியம்**

:தேவை பகுப்பாய்வொன்றின்றி அடைந்து கொள்ளப்பட வேண்டுமென்று தெரிந்து கொள்வது பிரயோசனமற்ற செயலாகும். அரச நிருவாக சட்டகத்தலுள்ள பல்வேறு பிரிவினருக்கும் **மக்களுக்குரிய சேவைகளை ஆற்றுவதற்கான** என்ன விதமான திறமைகள் தேவைப்படுகின்றது என்பது சம்பந்தமான சான்றளிக்கக்கூடிய தகவல்களினை வழங்க்கூடிய தேவைப்பகுப்பாய்வொன்றின் மூலம் பொருத்தமான பயிற்சித்திட்டங்களும் திறமை மாற்றங்களும் இடம்பெற முடியும்.

**30%பயிற்சியளித்தல் பெறுமதி**

: பெரும்பாலான கற்றல் பங்காளர்கள் பிரயோகிக்க முடியாத உள்ளடக்கத்தைக் கொண்டதும் பிரயோகம் சம்பந்தமான மிகக் குறைந்தளவு திறமைகளை கட்டியெழுப்பக்கூடிய கற்றல்களை மேற்கொள்வதால், கற்பிக்கப்பட்ட கற்றல் பங்காளர்களுக்கான பெறுமதி சேர்க்கை மிக்க் குறைவானதாகும். அரசாங்க துறையில் காணப்படுகின்ற வலு தூரப்பாட்டின் காரணமாக கற்றல் பங்காளர்களினால் கற்கை நெறிகளுக்கான கேள்வி அழுத்தமானது மிகக் குறைவானதாக காணப்படுவதோடு, அவர்கள் கற்பிக்கப்படுவது பொருத்தமானதா? பிரயோகிக்க கூடியதா? அல்லது புதியவையா எனப்பார்ப்பதை விட வழங்கப்படுவதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றன.

**1% மற்றப்பட்ட விழுமியம்**

: கற்றல் பங்காளர்கள் (பிரதான பொதுத்துறை நிருவாக அலுவலர்கள்) பெரும்பாலும் பிரயோகிக்க முடியாத கோட்பாட்டு ரீதியான அறிவினை கற்றதனாலும், எல்லா மட்டங்களிலும் சிறிதளவிலான அல்லது பூச்சியமான திறன்களை கொண்டிருந்ததாலும் பொது மக்களுக்கான மாற்றப்பட்ட பெறுமதி சேர்க்கை குறிப்பாக வெறுமையாகவே காணப்படுகின்றது. எனவே, தங்களது சொந்த முகாமைத்துவ முறைகளுக்கு இதனை மாற்றுவதனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாரதூரமான தாக்கத்தினை சேவை நியமங்களில் ஏற்படுகின்றது. பிரஜைளின் பின்னூட்டியை பெற்றுக் கொள்ளாத இம்முறையால் நிலைமையினைப் புரிந்து கொள்வதற்கு சிறிதளவிலான அல்லது சந்தர்ப்பமற்ற நிலைமையே காணப்படுகின்றது.

ஆகவே, இஅநிநி தொழிற்படுத்துகின்ற ஒரு வழியான முறைமை மட்டும் மாத்திரமின்றி பொறுப்புக் கூறாத்தும் ஒருவழியாக மாற விரும்பத்திற்குள்ளாகாத சூழலும் இதற்குகாரணமாக அமைகின்றது. செயல்வலுவுள்ள சூழலில், அனைத்தி மனிதவள அபிவிருத்தி நிறுவனங்களும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது அதற்கமைவாக கணிசமானளவு அழுத்தங்களை எதிர்நோக்குகின்றன. இந்நிலையில் வாடிக்கையாளர்களின் தேவைகளும் விருப்பங்களும் பிரயோகிக்கக்கூடிய நவீன அறிவினையும் தகமைகளையும் கற்றுக் கொள்வதாக அமையும்.

நிறுவனத்தின் அதிகளவிலான வரலாற்றில் இவ்வாறான நிலையான சவாலொன்றுடன் போராடி வருகின்ற நிலைமை காணப்படுகின்றது. தற்போதிருக்கும் மாதிரியின் தீவிரமான சோதனைக்குட்படுத்தப்படுகின்ற போது பின்வரும் உண்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

- அரசாங்கதுறையில் மனிதவள அபிவிருத்திக்காக அண்மையில் பல்வேறு உபாயங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், பெரும்பாலான உபாய முன்னெடுப்புக்கள் இறுதி பயன்பாட்டாளரின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் குறைந்தளவிலேயே ஒருங்கிணைந்துள்ளன.
- தற்போதைய தொழிற்பாட்டு முறைமையானது, ஒரு வழி தொடர்பாடலையும் தகவல் பாய்ச்சலினையும் அநுமதிக்கின்றது.
- நீடித்திருக்கக்கூடிய நிலைமை உயர் தொழிற்பாட்டு மீடிறனில், இஅநிநி ஆனது குறைந்தளவிலான தொழிற்பாட்டு மீடிறனில் தொழிற்படுவதற்குத் தேவையான உபாயங்கள் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்புக்களின் பற்றாக்குறையான நிலைமையில் காணப்படுகின்றது.
- சூழல் மற்றும் தொழிற்பாட்டு மாதிரியானது அதிகரித்த உயர்தர நிறுவன தொழிற்பாட்டினை வழங்குவதற்குத் தேவையான மீட்சித் துரித்த்தினையும் வழங்கத் தவறியுள்ளது.

மேற்படி பக்கங்கள் தற்போதைய இஅநிநி தொழிற்படுகின்ற நிலைமைகளில் காணப்படுகின்ற குறைந்த வினைத்திறன் மட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. இது தொழிற்பாட்டு மாதிரியில் அதன் உச்ச வினைத்திறனினதும் மற்றும் அது நிகழக்கூடுவதற்கு தேவையான எதிர்பாராத விடயங்களையும் அறிந்தி கொள்வதற்கு வசதியளிக்கின்றது.

## 9.4 பொருத்தமான சூழலும் ஆகக்கூடிய தொழிற்பாட்டு வினைத்திறனும்

மிகப் பொருத்தமான சூழலில், இஅநிநி மிகச் சரியான தகவல்களினைப் பெற்றுக் கொள்கின்ற நிலைமையில் காணப்படும் மிகச் சரியான தகவல் என்பதனால், நிறுவனத்தின் மிகப் பொருத்தமான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் அரச துறை நிறுவனங்களினால் இலங்கை பிரஜைகளினால் வேண்டப்படுகின்ற தேவையான தர நியமங்கள் மற்றும் தேவைகளை வழங்குவதற்கான திறமைகளை அறிந்து கொள்வதனைக் குறிக்கும். **இது பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் சேவைகளை வழங்குகின்ற தொழிற்பாடு மாத்திரமன்றி செயற்படு வினைத்திறனையும் செயற்பாட்டினையும் உச்சப்படுத்துகின்ற செயன்முறையாகும்.**

தொடர்ச்சியாக, இது பொது மக்களிடமிருந்து அரசதுறை அலுவலர்கள் மீது வேண்டப்படுகின்ற சேவை தரங்கள் மற்றும் நியமங்களுடன் சம்பந்தப்பட்ட கேள்வி அழுத்தங்கள் தொடர்பான பின்னூட்டலுடன் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இக்கேள்வி நிலைமையானது முக்கிய அரசாங்க துறை பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களை நோக்கி மாற்றப்படுதல் வேண்டும். இச்சந்தர்பத்தில் இஅநிநி பூரண தகவல்களை தன் வசம் வைத்திருப்பதாக பொது மக்களால் வேண்டப்படுகின்ற சேவை நியமங்களுக்கமைவாக சேவைகளை வழங்கும் பொருட்டு கற்றல் பங்காளர்களினால் அறிவு, திறன்கள், மனப்பாங்கு, திறமைகள் என்பவற்றினை கட்டியெழுப்புவதன் மூலம் அவர்களை வலுப்படுத்துவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் இந்நிலைமையானது **மிக நேர்த்தியான** மனிதவள அபிவிருத்தி முறைமையொன்றின் மூலம் விழுமிய விளங்கிக் கொள்ளல் சேர்க்கை அடைந்து கொள்வதற்கு வசதியளிக்கின்றது




மேற்படி சூழலில், மிகச் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காதன வாய்ப்பு, ஆரம்பத்தில் அதிக பெறுமதி உருவாக்கத்தின அநுமதிப்பதோடு மற்றும் **பொருத்தமான பயிற்சியளித்தல், திறன் கட்டியெழுப்பல் நுட்பங்களோடு,** அதகரித்த பெறுமதியினை இறுதி வாடிக்கையாளர்களான பிரஜைகளுக்கு பன்மடங்காக்குகின்றது.

**90%**
**பயிற்சியளித்தல் விழுமியம்**

இஅநிநி ஆனது மிகச் சரியான தகவல்களினைப் பெற்றுள்ளதால் நிறுவனமானது கற்றல் பங்காளிகள் தொழிற்படுகின்ற நிகழ்வுடன் தொடர்புடைய சரியான மற்றும் பொருத்தமான பயிற்சியளித்தல் மற்றும் தகைமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கக் கூடியதாக உள்ளது. இந்த பெறுமதி அதிகரிப்பானது பெரும்பாலும் 90% மான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பெறப்பட்டதாகும்.

**எதிர்பார்க்கை:** இஅநிநி ஆனது சந்தை தகவல்கள், கவனம் செலுத்தத்தக்க கட்டமைப்பு மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களை பிரயோகிக்கக்கூடிய பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்த உசாவுலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**100%**
**மாற்றப்பட்ட விழுமியம்:**

அபிவிருத்தி செயல்முறையின் நடைமுறைசார் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ள கற்றல் பங்காளர்களினது தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களும், அறிவு மாற்றல் செயற்பாடுகளும் அமைதல் வேண்டும். ஏனேனில் அவர்கள் தமக்கு பிரயோகிக்க முடியுமான, கூடியதான விடயங்களைத் **தெரிந்து கொள்வதாக, உணர்வதாக** கருதுவதான அறிவினைத் தெரிந்து கொள்ளும் செயற்பாடு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாக காணப்படுகின்றது. அவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாக வருவதற்குரிய அறிவினைப் பெறுவதற்கு அவர்களால் பிரயோகிக்க முடியும். இங்கே கற்றல் பங்காளிகள் சிறந்த தரமான சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான பொதுமக்களின் அழுத்தம் காரணமாக அவர்கள் கற்றலில் **செயல்திறன் மிக்கவர்களாகவும் ஊக்கம் நிறைந்தவர்களாகவும்** இருப்பார்கள். அறிவு தொடர்பான இத்தகைய வினைத்திறன் அதிகரிப்பானது, கற்றலில் இறுதியாக பிரயோகிக்கத்தக்க நோக்கத்தினைக் கொண்டிராத கற்றல் பங்காளிகள் இருக்குமிடத்து, மீள் செயற்பாட்டு மாற்றத்திற்கு எதிராக மாற்றப்பட்டது.

**எதிர்பார்க்கை :** பயிற்சி வழங்கல் திறன்களான வயது வந்தோர் கற்றல் முறைமைகள் மற்றும் மூத்த பங்குபற்றுனர்களை கையாளக்கூடிய உரிமையினை இஅநிநி கொண்டிருத்தல் வேண்டும். நிறுவனமானது மிகச் சரியான மனித வள அபிவிருத்தி வழங்கல், வழிகாட்டுதல் மற்றும் நவீன கற்றல் எண்ணக்கருக்களை வழிகாட்டக்கூடிய தன்மையினைக் கொண்டிருக்குமாயின் கற்றல் பங்காளிகளினால் கற்றுக் கொண்டவைகளின் பெறுமதி பருமட்டமாக 100% ஆக அதிகரிக்கும். பயற்சித்திட்டங்களை மிகச் சரியாக வடிவமைப்பதானது, பயிற்சிப் பெறுமதிகளை வழங்குவதன் நிகழ்ச்சித்திட்டத்தின் 90% பெறுமதியினை பூர்த்தி செய்கின்றது. அத்தோடு நல்ல முறையில் வழங்குவதனூடாக 100% பெறுமதி சேர்க்கையினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. ஏனெனில், வடிவமைக்கப்பட்ட பயிற்சி சாதனங்களுக்கு இது பெறுமதியினைச் சேர்க்கின்றது.

**மாற்றப்பட்ட பெறுமதி200%**

: முறையான தேவைகளின் பகுப்பாய்வு 90% மாக இருக்கின்ற நிலையில், ஒத்திசைவான மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக உள்ளார்ந்த பெறுமதியினை உருவாக்கும் போது நவீன வயது வந்தவர்களுக்கான கற்றல் முறைகளின் மாற்றப்படுகின்ற பெறுமதி 100% ஆகும். இறுதி குடிமகனுக்கு வழங்கப்பட்ட சேவைப் பெறுமதி **பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதியின் பல மடங்கு பெறுமதியாகும்.** இதற்குக் காரணம், சரியான முறையில் சரியான அறிவினைச் சரியான நேரத்தில் பெற்றுக் கொள்ளலாகும். பயிற்சிப் பங்காளர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு, திறன்கள் என்பன கூடுதல் பெறுமதி கொண்டவையாக மாற்றப்படுவத்தோடு பல்வேறு வகையான புதிய வழிமுறைகளினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு, திறமைகளை அவர்களின் சொந்த சூழலில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது.

**விளங்கிக் கொள்ளத்தக்க**
**விழுமிய**
**சேர்க்கை**

: விளங்கிக் கொள்ளத்தக்க விழுமிய சேர்க்கையானது, பங்குபற்றுனரினால் விளங்கிக் கொள்ளப்பட்ட கற்றல் பெறுமதி கற்றல் பங்காளியின் **உள்ளக சிந்தனை செயற்பாடுகளின் ஊடாக பெருக்கப்பட்ட விகிதாசாரமற்றதாக** அமையும். இந்த விடயத்தினை விளங்கப்படுத்துவதற்கு, உணர்வுகளை முகாமை செய்வதற்கான கருவிகளையும், நுட்பங்களையும் உணர்வு சார்ந்த எண்ணக்கருவின் கீழ் கற்கின்ற சிவில் நிருவா உத்தியோகத்தர் ஒருவரை குறிப்பிடலாம். வயது வந்தோரிக்கான கற்றல் மாதிரியின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களானது வடிவமைக்கப்பட்டு வழங்கப்படுமாயின், இதன்மூலம் கிடைக்கப் பெறுகின்ற அறிவினை, பயிற்சிப் பங்காளி பல்வேறு சூழ்நிலைகளிலும் பிரயோகிக்கக் கூடிய வகையில் உள்ளார்ந்தமாக மாற்றிக் கொள்வார். அவர் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தான் பெற்ற ஆரம்ப அறிவு, சூழ்நிலைகளுக்கேற்ப புதிய உள்ளடக்கங்களை சேர்த்துக் குறிப்பிட்ட அச்சூழ்நிலையினை முகங் கொள்ளக்கூடிய வகையில் பரிணாமங்களை ஏற்படுத்துவார். இவ்வாறு பெற்றக் கொள்ளப்பட்ட அறிவினை உள்ளார்ந்தமாக நவீனமயப்படுத்துவதன் மூலம் மிகப் பரந்த பெறுமதியினை அறிவு மூலத்தின் நேரமிப் பயனாளியான பிரஜைகளுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

ஆகவே, சரியான நுட்பங்களைப்ப பாவித்து பயிலும் பங்காளர்களினால் பொருத்தமான பிரயோக அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் திறமைகள் மூலம் நாம் பெற்ற அறிவுக்கான பெறுமதி சேர்க்கையினை சேர்த்துக் கொள்வார்கள். இது பிரஜைகளுக்கான சேவை வழங்கலின் பெறுமதியினை அதிகரிக்கும்.

**எதிர்பார்க்கை:** விளங்கிக் கொள்ளத்தக்க விழுமிய சேர்க்கை நடைபெறுவதற்கு இஅநிந முகச் சரியான தகவல்கள், நவீன வழங்கல் முறையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்தித்திட்டங்கள், உள்ளார்ந்த மனித வள அபிவிருத்தி எண்ணக்கருக்கள் என்பவற்றினைக் கொண்டிருப்பதோடு எல்லாவற்றிற்கும் மேலாக தொடர் நவீனத்துவத்திற்கான பின்னூட்டல் மற்றும் தேடுதல் முறைமை ஒன்றினையும் மிகத்தரம் வாய்ந்த சேவை வழங்கல் முறைமைக்கான பிரஜைகளின் அழுத்தங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

## 9.5 ஆகக்கூடிய வினைத்திறனை அடைதல்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No } [illegible]/11 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No } | දිනය<br>திகதி<br>Date } 2013 පෙබරවාරි 2[illegible] දින. |

අධ්‍යක්ෂ,
ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය.

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනයේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව.

---

සමාංක හා 2012 දෙසැම්බර් 31 දිනැති මාගේ ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමග එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමග එවා ඇත.

සු.ඊ.එස්.විජේසිංහ
වැඩබලන විගණකාධිපති

පිටපත් :- 01. ලේකම්, රාජ්‍ය පරිපාලන හා ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
02. ලේකම්, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail } oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No: ஜேபீ/ஜீ/எஸ்எல்ஐடீஏ/எப்ஏ/2011

මබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2012 திசெம்பர் 31

பணிப்பாளர்
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 9 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

---

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுமானத்தேய்வு வீதாசாரம் தீர்மானிக்கப்படும் போது சொத்துக்களின் தன்மை மற்றும் ஆயுட்காலம் என்பன கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன்

மீள்பெறுமதி செய்யப்பட்ட சொத்துக்களின் மீதி ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 16,939,764 கிரயப் பெறுமதியான சொத்துக்கள் பாவனையில் காணப்பட்ட போதிலும் அவைகளை மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டக் கொள்கைகள்

பின்வருத் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் அறவிடமுடியாக் கடனுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணிப்பீடு செய்யப்பட்ட முறை அல்லது ஈடுபடுத்தப்பட்ட விகிதாசாரம் என்பன கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் 5 வருட சேவைக் காலம் பூர்த்தி செய்யப்பட்ட ஊழியர்களுக்காக பணிக்கொடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் ஒரு வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஊழியர்களுக்காகவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காண்பிக்கப்படுகின்ற கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) (i) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 3 வாகனங்களின் கிரயப் பெறுமதி கணக்கு வைக்கப்படாமல் காப்புறுதிப் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டமையினால் வாகனங்களின் கிரயம் மற்றும் மூலதன உதவிகளின் பெறுமதி என்பன ரூபா 10,625,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்ப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்களின் கிரயம் என்பவற்றுக்கிடையே ரூபா 25,458,440 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட வேறுபாடுகளினால் கணக்குகளில் ஒதுக்கப்பட்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 4,761,379 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,674,450 தொகை, செலுத்த வேண்டிய விரிவுரைக் கட்டண மீதியில் ஈடுசெய்யப்பட்டு தேறிய மீதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 736,000 தொகையான செலவினம் பெறவேண்டிய கணக்கு மீதியாகக் குறிப்பிடப்பட்டமையினால் ஆண்டின் பெறவேண்டிய கணக்கு மீதி மற்றும் மிகை என்பன அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) சொத்துக்கள் மீள் கணிப்பீட்டின் போது மின்சார உபகரணங்களின் பெறுமதி ரூபா 500,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 21,066 தொகையான இருப்பு மீதியின் பெறுதி ரூபா 476,680 தொகையாகக் காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டின் இறுதியில் கையிருப்பின் பெறுமதி ரூபா 455,614 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 385,000 கிரயமான வாகனமொன்று மீளாய்வாண்டின் போது ரூபா 200,950 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கிரயம் அல்லது திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பன அக்கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 379,788 கூட்டுப் பெறுமதியான நூலகப் புத்த இருப்பின் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 169,144 தொகையான நீர்க்கட்டணம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளிலும் அறிக்கைகளிலும் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே ரூபா 875,051 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 26,744,563 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர்களில் ரூபா 908,778 தொகையான 23 மீதிகள் 3 வருடத்தை விஞ்சியிருந்ததுடன் அதில் ரூபா 764,465 தொகையான 19 மீதிகள் 5 வருட காலத்தையும் விஞ்சியிருந்தன.

(ஆ) ரூபா 1,309,046 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதியில் 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 520,931 தொகையான 36 மீதிகள் காணப்பட்டதுடன் எஞ்சிய ரூபா 788,115 தொகையான 5 மீதிகள் 1 வருடத்திற்கும் 8 வருடத்திற்கும் இடையிலான காலப்பகுதிக்குரியதாக இருந்தன. நீண்ட காலமாகக் காணப்பட்ட இந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு மீயாள்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 25,796,270 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர்கள் மீதிகளில் ரூபா 2,454,433 தொகையான 24 மீதிகள் 03 வருடகாலத்தை விஞ்சியிருந்ததுடன் அதில் ரூபா 1,048,248 தொகையான 13 மீதிகள் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலவிவரும் மீதியாகும்.

(ஈ) ரூபா 17,370,338 தொகையான செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளிலிருந்து ரூபா 2,506,578 தொகையான 127 மீதிகள் 3 வருட காலத்தை விஞ்சியிருந்ததுடன் அதில் ரூபா 703,493 தொகையான 104 மீதிகள் 5 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற மீதிகளாகும்.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு மீதிகளுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 254,837,766 | முறையான வகையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் வருடாந்த மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் | 43,627,026 | கணனி தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய விபரமான பட்டோலை |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு | 13,406,655 | மீதி உருவான விதத்தைக் காண்பிக்கும் விபரமான பட்டோலை |
| அறிக்கை எழுதுவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | 1,401,629 | அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் அதன் விபரங்கள் |
| முற்பணத் தீர்ப்பனவு | 198,000 | தீர்த்தல் தொடர்பான விபரம், பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் |
| எரிபொருள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினம் | 5,919,975 | நாளாந்த ஓட்ட அட்டவணைக் குறிப்பு மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு |
| கடன்பட்டோர் | 2,505,460 | 28 கடன் மீதிகளுக்குரிய உறுதிப்படுத்தல் |
| கடன்கொடுத்தோர் | 2,891,468 | 20 கடன் மீதிகளுக்குரிய உறுதிப்படுத்தல் |

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபையின் கூட்ட அங்கத்தவர்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக 09 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு மற்றும் 1991 மார்ச் 20 ஆந் திகதி பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிதியை ஈடுபடுத்தியதன் பின்னர் ஆண்டின் தேறிய மிகை, வருமானத்தில் சேமிக்கப்பட்ட சகல நிதியும் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 13(8) ஆம் பிரிவு | 13(7) (ஏ) பிரிவின் பிரகாரமான அறிக்கை கட்டுப்பாட்டுச் சபையினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அதில் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கை கிடைத்து 3 மாத காலத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட |

| | |
|---|---|
| | வேண்டும். முன்னைய ஆண்டிற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) தாபன விதிக்கோவையின் IX ஆவது அத்தியாயத்தின் 1 மற்றும் 2.2 ஆம் பந்திகள் | அரசாங்க சேவையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு மற்றும் பயிற்சிகளைப் பயன்படுத்தி உழைக்கப்படுகின்ற கட்டணங்களில் 10% ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 188(2) | தேறாத ரூபா 124,725 தொகையான காசோலைகள் மற்றும் 26 காசுக் கட்டளைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி 371(2) (ஆ) | முற்பணம் வழங்கும் போதும் தீர்த்து வைக்கும் போதும் உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 1 வருடத்திற்கும் 19 வருடத்திற்கும் இடையிலான காலத்தில் தீர்க்கப்படாத 44 முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,309,046 ஆக இருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | நி.பி 1647(அ) | வாகனம் மற்றும் அதன் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.8 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல் வாங்கல்கள்

1963 நவம்பர் 30 ஆந் திகதிய 1024எப்/800/29 சீச ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் "அரசாங்க கூட்டுத்தாபனம்" தாமதமின்றி நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களைப் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமல் அரசாங்க நிதிப் பிரமாணம் மற்றும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்தன. எனினும் உத்தியோகத்தர்களின் வருடாந்த விடுமுறை மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக மாத்திரம் கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்த போதிலும் கடமை நேரம் மற்றும் அலுவலக நேரம் என்பன தொடர்பான அந்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் வருடாந்தம் கவனத்திற்கொள்ளக் கூடிய கடமை நேர மணித்தியாலங்கள் இழக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக நேரக் கொடுப்பனவும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

விரிவுரைகளை நடாத்துதல் மற்றும் அதனோடு தொடர்புடைய இணைப் பாடநெறிகளைத் தொடர்புபடுத்துதல் திட்டமிடுதல், மென்பொருள் அபிவிருத்தி, அறிக்கை எழுதுதல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிறுவகத்தின் நிரந்தர மற்றும் ஒப்பந்த விரிவுரையாளர்களுக்கும் இவ்வாறே உத்தியோகத்தர்கள் சிலருக்கும் மீளாய்வாண்டின் போது ரூபா 12,329,726 தொகையும் முன்னைய ஆண்டின் போது ரூபா 9,952,915 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

2007 ஆகஸ்ட் 21 ஆந் திகதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிச்சேவை வழங்கல் தொடர்பான கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சேவைகள் நாளாந்த கடமை காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவில் காணப்படுகின்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இவ் விடயங்கள் பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 640,761 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 480,323 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டுக்கான நிதி விளைவுகளில் ரூபா 160,438 தொகையான முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியது. விடுதிகளின் வருமானம் ரூபா 1,070,558 இனால் அதிகரித்திருந்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணியாக இருந்தது.

3.2 அறிக்கையின் 2.2.1 மற்றும் 2.2.3 ஆம் பந்திகளின் சீராக்கங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டின் மிகையில் அண்ணளவாக ரூபா 5.5 மில்லியன் அளவில் பாதமான தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதனால் அறிக்கையிடப்பட்ட நிறுவனத்தின் செயற்பாட்டு மிகையான ரூபா 640,761 அளவு மேற்கூறப்பட்ட தாக்கங்களின் காரணமாக பற்றாக்குறை உள்ளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.4.1 பயிற்சி நடவடிக்கைகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| பாடநெறிகளின் விபரம் மற்றும் ஆண்டு | திட்டமிடப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | பாடநெறிகளிற்காக தேர்வு செய்யப்பட்ட எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | கைவிடப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| சான்றிதழ் பாட நெறிகள் | | | | | |
| 2011 | 72 | 30 | 756 | 633 | 123 |
| 2010 | 78 | 30 | 890 | 733 | 117 |
| டிப்ளோமா பாடநெறிகள் | | | | | |
| 2011 | 09 | 06 | 245 | 208 | 37 |
| 2010 | 06 | 04 | 213 | 202 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் திட்டமிடப்பட்டு நடாத்தப்படாத சான்றிதழ் பாடநெறிகளின் எண்ணிக்கை முறையே 48 மற்றும் 42 ஆக இருந்தன.

(ii) முன்னைய ஆண்டின் போது திட்டமிடப்பட்ட இரண்டு டிப்ளோமா பாடநெறிகளும், மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட மூன்று பாடநெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய அண்டின் போது திட்டமிடப்பட்ட சான்றிதழ் பாடநெறிக்காக தெரிவு செய்யப்பட்ட 117 பேர்களும் மீளாய்வாண்டில் தெரிவு செய்யப்பட்ட 123 பேர்களும் பாடநெறியைக் கைவிட்டிருந்தனர்.

(iv) திட்டமிடப்பட்ட டிப்ளோமா பாடநெறிக்காக சேர்க்கப்பட்டவர்களில் முன்னைய ஆண்டின் போது 11 பேர்களும் மீளாய்வாண்டின் போது 37 பேர்களும் பாடநெறியைக் கைவிட்டிருந்தனர்.

(ஆ) நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பாடநெறிகளின் விபரம் | 2011 ஆம் ஆண்டு | | 2010 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
| முன்சேவைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 146 | 5 | 610 |
| திறன் முன்னேற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 11 | 396 | 6 | 233 |
| பயிற்சி வழங்குபவர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 13 | 286 | - | - |
| பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | | | |
| - பூர்த்தி செய்த | 02 | 65 | 02 | 118 |
| - நடாத்தப்படுகின்ற | 05 | 155 | 06 | 231 |
| பயிற்சி ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித்திட்டம் | 16 | 1,398 | 30 | 901 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது புதிதாக பயிற்சி வழங்குபவர்களைப் பயிற்றுவிக்கும் பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 13 பாடநெறிகளில் 286 பேர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(ii) 2010 இல் நடாத்தப்பட்ட 30 பயிற்சி ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 901 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 46 நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 1398 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்தது.

### 4.1.2 விரிவுரை நடாத்துதல்

(அ) உள்ளக விரிவுரையாளருக்கு மாதமொன்றிற்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 45 மணித்தியாலங்கள் விரிவுரை நடாத்த வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் உள்ளக விரிவுரையாளர்களினால் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் நடாத்தப்பட்ட விரிவுரைகள் தொடர்பான சுருக்கமான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | விரிவுரையாளர்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்கள் | நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் | குறைவான விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை (முரண்) |
|---|---|---|---|---|
| 2011 | 18 | 9,720 | 2,108 | 7,612 |
| 2010 | 15 | 8,100 | 2,560 | 5,540 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டின் போது 5,540 விரிவுரை மணித்தியாலங்களும், மீளாய்வாண்டின் போது 7,612 விரிவுரை மணித்தியாலங்களும் நிறுவகத்தினால் இழக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் எந்த விரிவுரையாளரும் மாதத்திற்கு குறிப்பிடப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியால எண்ணிக்கையையும் நடத்தாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது மூன்று விரிவுரையாளர்கள் மாத்திரம் வருடத்திற்குத் தீர்மானிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் சரி அரைவாசிக்கு மேல் விரிவுரைகளை நடாத்தியிருந்தனர்.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளக மற்றும் வெளியக விரிவுரையாளர்கள் நடாத்தியிருந்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை தொடர்பான சுருக்கமான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | உள்ளக விரிவுரையாளர் | | வெளியக விரிவுரையாளர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | விரிவுரை நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (கொடுப்பனவின் அடிப்படையில்) | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (கொடுப்பனவின் அடிப்படையில்) | விரிவுரை நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (கொடுப்பனவின் அடிப்படையில்) | |
| | விரிவுரை மணித்தியாலம் | விரிவுரை மணித்தியாலம் | விரிவுரை மணித்தியாலம் | விரிவுரை மணித்தியாலம் | விரிவுரை மணித்தியாலம் |
| 2011 | 2,108 | 2,520 | 4,115 | 4,172 | 12,915 |
| 2010 | 2,560 | 2,226 | 2,346 | 2,450 | 9,582 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் உள்ளக விரிவுரையாளர்கள் திட்டமிடப்பட்ட பாடநெறிகளில் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 452 மணித்தியாலங்களால் குறைவடைந்திருந்தது.

(ii) கொடுப்பனவின் அடிப்படையில் செய்யப்பட்ட விரிவுரை நிகழ்ச்சித்திட்டங்களின் போது நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது 294 மணித்தியாலத்தினால் அதிகரித்திருந்தன.

(iii) வெளியக விரிவுரையாளர்கள் திட்டமிடப்பட்ட பாடநெறிகளில் நடாத்தியிருந்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் 1,769 மணித்தியாலங்களினால் அதிகரித்திருந்தன.

(iv) வெளியக விரிவுரையாளர்கள் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களில் நடாத்தியிருந்த விரிவுரை மணித்தியாலங்களின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 1,722 மணித்தியாலங்களினால் அதிகரித்திருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பொது முயற்சிகளின் பிரமாணங்கள் தொடர்பாக அறிவூட்டும் 97 நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்பாட்டிற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ரூபா 8,620,447 தொகை வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் அதற்குரிய கொடுப்பனவுகள் தீர்த்து வைக்கப்படாமல் கணக்குகளில் ரூபா 2,000,000 மீதி இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட புதிய கட்டிடத் தொகுதிக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் கொழும்பு மாநகர சபைக்கும் சேவைக்கட்டணமாக முறையே ரூபா 3,714,000 மற்றும் ரூபா 292,709 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் II ஆம் கட்டத்திற்குரிய நிருவாகக் கட்டிட நிர்மாணம் கைவிடப்பட்டமையினால் அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,615,738 தொகை செயற்பாடற்ற செலவினமாக இருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டிருந்த விடுதியின் 13 அறைகளின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. அக் காரணத்தினால் நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு வெளியக விடுதி வசதிகளை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 43,440 தொகையான செலவினத்தைச் செய்ய வேண்டியிருந்தது.

(ஈ) 1997, 2002 மற்றும் 2008 போன்ற ஆண்டுகளின் போது இரண்டு செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த மூன்று வாகனங்களின் உரித்தை நிறுவகத்தின் பெயரில் கையேற்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டினையும் உள்ளடக்கிய முன்னைய 4 ஆண்டுகளில் எவ்வித பயன்பாடான செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாத ரூபா 44,715 கூட்டுத்தொகையான மீதிகளுடன் வங்கியின் இரண்டு சேமிப்பு கணக்குகள் செயற்பாடின்றி பேணப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் இரண்டு பிரதான வங்கி (நடைமுறை) கணக்குகளில் கருத்திற் கொள்ளகூடிய காசுமீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அக்காசு மீதிகளில் மாதாந்தம் சாரசரியாக ரூபா 124,799,787 தொகை காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது ஒரு முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கில் ஒன்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

4.4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் ஆண்டிற்குரிய ஆதனவரி செலுத்தும் போது கழிவு பெறமுடியுமாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் பெறக்கூடியதாக இருந்த ரூபா 76,222 தொகையான கழிவு இழக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 762,220 தொகையான ஆதனவரி 2012 யூலை 30 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்படாமையினால் அதற்காக 20% ஆன தண்டம் / மிகைக் கட்டணமாக ரூபா 152,440 தொகை மாநகர சபைக்குச் செலுத்த நேர்ந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

4.5 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 மற்றும் 2007 இற்கு இடையிலான காலப்பகுதியில் 5 உத்தியோகத்தர்களிடமிருந்தும் வெளி நிறுவனங்களிலிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 633,150 கூட்டுத்தொகையான விடுதிக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி

வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் அது கணக்குகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பயிற்சி வழங்குபவர்களைப் பயிற்றுவிக்கும் பாடநெறியின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 9,942,625 தொகையாக இருந்த போதிலும் அதில் திறைசேரியின் அங்கீகாரம் ரூபா 3,493,320 தொகைக்காக மாத்திரமே பெறப்பட்டிருந்தது. பாடநெறியின் மொத்த செலவினத்தையும் நிறுவனம் செலவு செய்து பாடநெறி நடாத்தப்பட்டிருந்ததுடன் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 பேருக்கு வெளிநாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்தன. பயிற்சி பாடநெறிக்காக திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,763,915 தொகை 2012 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. எவ்வித அறவிடல்களும் இன்றி பயிற்றுவிப்பாளர்களுக்கு விடுதியில் 30 அறைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த முறையில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டமையினால் நிறுவனத்திற்கு உழைக்கக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) பட்டப்பின் படிப்பு மற்றும் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட மற்றும் பங்குபற்றிய 40 விண்ணப்பதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,583,050 தொகை முன்னைய ஆண்டின் போது கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாடநெறிக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த விண்ணப்பதாரர்களில் இருவர் மீளவும் 2008/2010 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான பாடநெறிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ii) ஒரு விண்ணப்பதாரரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 6,750 தொகை பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் பாடநெறிக் கட்டணத்தை விஞ்சி ரூபா 23,250 தொகை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பாடநெறிக் கட்டணம் அவருக்கு மீளச் செலுத்தப்பட்டிராததுடன் செலுத்த வேண்டிய தொகையாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட 21 பதவிகளில் 48 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சாரதி மற்றும் கணனி நிகழ்ச்சித்திட்ட பகுப்பாய்வு போன்ற அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பதவிகளின் எல்லையினை விஞ்சி மூவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) பதவியணியில் 14 அங்கத்தவர்கள் தமக்கு உரித்தான வருடாந்த விடுமுறை அளவுகளை விஞ்சி 224 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றிருந்தனர். இதில் சம்பளமற்ற 150 விடுமுறை தினங்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட பதவியணியின் நான்கு அங்கத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

4.7 **ஊழியர் பணிக்கொடைக்காக நிதிஏற்பாடுகளின் மூலம் நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்**

முன்னைய ஆண்டின் இறுதியில் பதவியணியினர் அங்கத்தவர்களில் 62 பேருக்காக ரூபா 15,308,325 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட போதிலும் அப்பணத்தை முதலீடு செய்து நிதியமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 92 வரையும், நிதிஏற்பாடு ரூபா 17,930,529 தொகை வரையும் முன்னேற்றமடைந்திருந்தது.

5. **கணக்களிப்பும் நல் ஆளுகையும்**

5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈம/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 5.1.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த

பாதீட்டுடன் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறே 2011 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் அதிகாரம் நடைமுறைப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபையினால் 2011 நவம்பர் 29 ஆந் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் ஆரம்பம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை உள்ளகக் கணக்காய்வு அலகு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கணக்காய்வுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வுக் கூட்டத்தின் செயலாற்றல் தொடர்பாக அறிக்கை நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டம் நடாத்தப்படாமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினத்திற்கிடையே முறையே 06% தொடக்கம் 96% வரையும் மற்றும் 15% தொடக்கம் 100% வரையான முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.5 ஆண்டறிக்கை சபைக்கு முன்வைக்கப்படுதல்

முன்னைய வருடங்களிலும் ஆண்டறிக்கை சபைக்குச் சமர்ப்பிப்பதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு 2012 யூன் 07 ஆந் திகதியே முன்வைக்கப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) காசு மற்றும் வங்கி நடவடிக்கைகள்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) முற்பணம்
(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(எ) பதவியணியினர் நிருவாகம்
(ஏ) பயிற்சி நடவடிக்கைகள்

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>1971 ஆம் ஆண்டின் 38 அம் இல. நிதிச்சட்டத்தின் பிரிவு 14(2) (இ) இன்படி 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானங்கள் மீதான பணிப்பாளரின் கருத்துரை</u>**

2012.12,31 ஆம் திகதிய மேற்படி அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் கருத்துரை பின்வருமாறு.

## 2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரை

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**நியமம் – 18**

**(i)** 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போது திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(ii)** துறையின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் புதிய விகிதங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**(iii)** முழுமையாக தேய்மானமளிக்கப்பட்ட சொத்துக்கள் மீளவும் கணிப்பீடு செய்யப்படும். அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்படும்.2011 ஆம் ஆண்டு சொத்துக்களின் மீள் கணிப்பீட்டிலுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கும் 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) உடன்படுகின்றேன். கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கும் அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) நியாயமான வழிமுறைகளுக்கமைவாக அனைத்து ஊழியர்களுக்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கொள்கைகளை மாற்றிமைப்பதற்கும் அதற்கமைவாக நிதிக்கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) i. சரி செய்யப்பட்டுள்ளது.

Ii நிதிக்கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள் மற்றும்நிலையான சொத்து கூற்றிலுள்ள சொத்துக்கள் ஆகியவற்றினை இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டுக்கான இறுதி நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதிகள் சீராக்கப்படும்.

(ஆ) உடன்படுகின்றேன். 2012 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளினூடாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) செலவின வகைப்படுத்தலிலுள்ள தவறு திருத்தப்படும்.

(ஈ) திருத்தியமைக்கப்பட்டது.

(உ) கணப்பீட்டிலுள்ள தவறு காரணமாக ஏற்பட்டது. இது 2012 இறுதி கணக்குகளின் மூலம் திருத்தியமைக்கப்படும்.

(ஊ) திருத்தியமைக்கப்பட்டது.

(எ) திருத்தியமைக்கப்பட்டது

(ஏ) அவற்றினை வருமான செலவினமாக சீர் செய்வதற்கு தேவை எழவில்லை. எவ்வாறாயினும் மேலும்

அத்தகைய தவறுகள் இடம் பெறாமலிருப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

அட்டவணையிலுள்ளவற்றினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2.5 பெறத்தக்க மற்றும் செலுத்தத்தக்க கணக்குகள்

(அ) முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின்படி திருத்தப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின்படி திருத்தப்பட்டது.

(இ) முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின்படி திருத்தப்பட்டது.

(ஈ) முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின்படி திருத்தப்பட்டது.

### 2.2.6 கணக்காய்வு செய்தமைக்கான சான்றுகள் கிடைக்காமை

**நிலையான சொத்துக்கள்**

நிலையான சொத்துக்களுக்கென பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. உடனடியாக அதன் இறுதி அறிக்கையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கணனி துணைப்பொருட்களும் மென்பொருட்களும்**

2012.12.31 இலுள்ளவாறு 2012 இற்கான கணனி துணைப் பொருட்கள் மற்றும் மென்பொருட்களை தயாரிப்பதற்கும் கையளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**தேய்மானம்**

2012 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளுடன் ஆவணங்களை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அறிக்கை தயாரிப்பதற்கான கொடுப்பனவு**

2007 ஆம் ஆண்டு சுற்றறிக்கைக்கமைவாக அறிக்கை எழுதுவதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கைகளின் பிரதிகள் நிகழ்ச்சித்திட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுன் தேவையான போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியும்.

**எரிபொருள் மற்றும் திருத்தச் செலவுகள்**

நாளாந்தம் பயணிக்கும் தூரம் தொடர்பான குறிப்புகள் மற்றும் மாதாந்த செயற்பாட்டு பெயர்த்தெடுப்புகள் என்பன முறையாக புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கடன்பட்டோர்கள்**

2012 ஆம் ஆண்டுக்கான மீதிகளுக்கு ஆதரவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கடன்கொடுத்தோர்கள்**

2012 ஆம் ஆண்டுக்கான மீதிகளுக்கு ஆதரவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.7 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) முகாமைத்துவ சபையானது சிரேஸ்ட அரசாங்க உத்தியோகத்தர்களான அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்டிப்பதுடன் இத்தகைய அதிகாரிகள் எப்போதுமே கடுமையான உத்தியோகப்பணிகளில் ஈடுபட்டு வருவதன் காரணமாக அவர்களுக்கு கூட்டங்களில்கலந்து கொள்ள முடியாமையினால் கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையினை குறைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. நிதிச் சட்டம்**

I. எதிர்காலத்தில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்

2011.12.31 இலுள்ளவாறான அறிக்கையானது பிரிவு 13(7)அ இன் பிரிவிற்கமைவாக

II. 2013.01.24 ஆம் திகதியன்று முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**(இ) தாபன விதிக் கோவையின் அத்தியாயம் ix இன் 2.2 ஆம் பந்தி**

இது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட நிலைகளில் சில பணிகளை மேற்கொள்ளுகின்ற உத்தியோகத்தர்களுக்கான அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய கொடுப்பனவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிறுவகத்தின் ஆலோசகர்கள் நிறுவகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வகை கொடுப்னவுக்காக முறையான கொடுப்பனவு நடைமுறையானது நிறுவகத்தில் உள்ளது. இத்தகைய எற்பாடுகள் இந்த நடைமுறைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன் தனிப்பட்ட நிலைகளில் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக 10% கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

**(ஈ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள்**

I. நி.பி. 188 (2)

கொடுத்து தீர்க்கப்பட்டது

II. நி.பி. 371 (2) (அ)

உடன்படுகின்றேன். 2008,2009.2010 மற்றும் 2011 ஆண்டுகளுக்கான தீர்க்கப்படாத முற்பணங்கள் முறையாக கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சபைக்கு முந்திய ஆண்டுகளின் தீர்க்கப்படாத மீதிகளைக் சமர்ப்பிப்பதற்கும் அவற்றினைக் கொடுத்து தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

III. நி.பி.1647 (அ)

தற்போது, நி.பி.1467(அ) இன்படி உரிய விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2.2.8 **உரிய அதிகாரகளினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தின் நிருவாக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஊழியர் கட்டளைச் சட்டத்திற்கமைவாக வகுக்கப்பட்டுள்ளதுடன் உரிய ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2.9 **முரண்பாடான கொடுக்கல் வாங்கல்கள்**

விரிவுரைகள், அறிவுறுத்தல் பாடநெறிகளை ஒருங்கிணைத்தல், மென்பொருள் விர்த்தி, அறிக்கை தயாரித்தல் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள் வெளியக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சுற்றறிக்கைகளுக்கமைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

3 **நிதிசார் மீளாய்வு**

3.2 **நிதிசார் மீளாய்வு**

4 **தொழிற்பாட்டு மீளாய்வு**

4.1.1 **பயிற்சியளித்தல் நடவடிக்கைகள்**

(அ) (i)/(ii) 2012 மற்றும் 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டாய நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தப்பட்ட புத்துயிரூட்டும் பாடநெறிகள் மற்றும் திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை கவனத்தில் கொள்ளும் போதும் 5 நாட்களுக்கான 11 அட்டவணைகளைக் கொண்டுள்ள புத்துயிரளிக்கும் பாடநெறி 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டதுடன் இது முழு ஆண்டுக்கும் 06 தொகுதிகளுக்காக 11 அட்டவணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 66 பயிற்சிப் ப்பாடநெறிகள் 06 தொகுதிகளுக்காக 11 அட்டவணைகளுடன் கூடிய 05 நாள் குறுகிய பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன் பயிற்சியளித்தல் பாடநெறிகளின் மொத்த எண்ணிக்கை 330 ஆக இருந்துள்ளதுடன் பயிற்சியளித்தல் மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1980 ஆகும். மேலும் திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இநிசே உத்தியோகத்தர்களின் வகுப்பு 111 இனைச் சேர்ந்த 04 குழுக்ளுக்காக 24 நாட்களைக் கொண்ட 03 பாடநெறிகள் நடாத்தப்பட்டன. மொத்த பயிற்சியளித்தல் நாட்களின் எண்ணிக்கை 72 ஆகும். அத்துடன், இநிசே வகுப்பு 111 இனைச் சேர்ந்த 03 குழுக்களுக்காக 40 பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் மொத்த நாட்களின் எண்ணிக்கை 120 ஆகும். மேலும், சிறப்பு அடிப்படையில் இநிசே உத்தியோகத்தர்களுக்காக 15 நாள் பயிற்சியளித்தல் திட்டங்கள் நடாத்தப்பட்ட அதேவேளையில், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலான உத்தியோகத்தர்களுக்காக 80 நாள் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

- 2011 இல் அமுல்படுத்தப்பட்ட புத்துயிரளிக்கும் பாடநெறிகள், 10 கல்வி அட்டவணைகளைக் கொண்டிருப்பதுடன் ஆண்டு முழுவதும் 04 குழுக்களாக தொடர்ந்து நடாத்தப்பட்டன. அதற்கிணங்க, 40 பாடநெறிகள் ஒவ்வொன்றும் 05 நாட்களைக் கொண்ட 10 குறுகியகால பாடநெறிகளாக 04 குழுக்களுக்காக நடாத்தப்பட்டன. அவை 200 பாடநெறி நாட்களையும் 1200 மணித்தியாலயங்களையும் கொண்டுள்ளன. மேலும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இநிசே வகுப்பு 1 இனைச் சேர்ந்த 4 குழுக்களுக்காக 24 நாட்களைக் கொண்ட 04 பாடநெறிகள் நடாத்தப்பட்டன. அதற்கிணங்க, பாடநெறி நாட்களின் எண்ணிக்கை 96 ஆகும். மேலும் மொத்தமாக 180 நாட்களைக் கொண்டதாக இநிநே இன் வகுப்பு 111 இனைச் சேர்ந்த 6 குழுக்களுக்காக 30 நாள் பாடநெறிகள் நடாத்தப்பட்டன.
- மேலும், 2011 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட நிகழச்சித்திட்டங்களில் பெரும்பாலானவை கட்டணத்திற்காக நடாத்தப்பட்டதுடன் குறித்த ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி எற்பட்டது. குறித்த ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளில் மூன்றில் இரண்டு பங்கானவை கட்டண அடிப்படையில் நடாத்தப்பட்ட அதேவேளையில், மூன்றில் ஒரு பங்கு மட்டும் இலவசமாக நடாத்தப்பட்டன.
- விரிவுரை மண்டபங்களின் மீளமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல்களின் காரணமாக விரிவுரை மண்டபங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது.

(iii) திட்டமிடப்பட்ட சான்றிதழ் பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களில் கணிசமானோர் அவற்றினை விட்டு விலகிச் சென்றுள்ளனர். எவ்வாறாயினும், உரிய திணைக்கள தலைவர்கள் எமது பாடநெறிகளில் பங்குபற்றுவதற்காக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான அதிகாரத்தினைக கொண்டுள்ளார்கள். பாடநெறிகளுக்காக உத்தீயாகத்தர்களை விடுவிக்காமை, தனிப்பட்ட பிரச்சனைகள் மற்றும் பாடநெறிக் கட்டணத்தினை செலுத்த முடியாமை மற்றும் விடுப்பு எடுத்தல் என்பன எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை.

(iv) டிப்புளோமா பாடநெறிகளில் இணைந்திருந்தோரில் கணிசமானோர் அப்பாடநெறிகளிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். பாடநெறிக்கட்டணத்தினை செலுத்த முடியாமை, விடுப்புக்களை எடுத்தல் மற்றும் பரீட்சைகளை முறையாகப் பூர்த்தி செய்யாமை போன்ற காரணங்களினால் அவ்வாறு நிகழ்ந்துள்ளபோதிலும் அவை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும்.

(ஆ) (i) 2011 இல் பயிற்சியளித்தல் முறையினை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான 13 மற்றும் 5 நாள் பாடநெறிகள் பல மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. அதற்கிணங்க, 286 பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 462 ஆகும்.

(ii) 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. இலங்கை அபிவிருத்தி நிருவாக கட்டளைச் சட்டத்திற்கமைய, பயிற்சியளித்தல் உசாவுதல் சேவையினை வழங்குவது எமது கடமையாகும். அதற்கிணங்க, வெளியக நிறுவனங்களினால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கிணங்க, இத்தகைய பயிற்சியளித்தல் உசாவுதல் சேவையானது நடாத்தப்படுகின்றன. பொதுத் திறைசேரியினால் அளிக்கப்படும் நிதிக்கமைவாக நிறுவனங்களின் செலவுகளை ஈடு செய்வதற்காக இந்நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### 4.1.2 விரிவுரைகளை நடாத்துதல்

(அ) (i)/(ii)/(iii) விரிவுரைகளின் எண்ணிக்கை மேற்குறித்த அவதானங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் கீழ் குறைவாகக் காணப்பட்ட போதிலும் பல்வேறு பட்டடிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. அவை விரிவுரைகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல், கருத்திட்ட அறிக்கைகள் தொடர்பில் உசாவுதல் மேற்கொள்ளுதல், மாவட்ட பயிறிசியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மெற்பார்வை செய்தலும் அவதானித்தலும், விரிவுரைகள் தொடர்பிலான ஆவணப்படுத்தலை குறிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கைகள் மற்றும் விரிவுரை தொடர்பான விளக்கவுரைகளை தாயரித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈபட்டு வருகின்றன.

(ஆ) (i) விரிவுரைகளின் எண்ணிக்கை மேற்குறித்த அவதானங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் கீழ் குறைவாகக் காணப்பட்ட போதிலும் பல்வேறு பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. அவை விரிவுரகளை அளித்தல், ஒருங்கிணைத்தல், கருத்திட்ட அறிக்கைகள் தொடர்பில் உசாவுதல் மேற்கொள்ளுதல், மாவட்ட பயிறிசியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மெற்பார்வை செய்தலும் அவதானித்தலும், விரிவுரைகள் தொடர்பிலான ஆவணப்படுத்தலை குறிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கைகள் மற்றும் விரிவுரை தொடர்பான விளக்கவுரைகளை தாயரித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈபட்டு வருகின்றன.

(ii) 1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. இலங்கை அபிவிருத்தி நிருவாக கட்டளைச் சட்டத்திற்கமைய, பயிற்சியளித்தல் உசாவுதல் சேவையினை வழங்குவது எமது கடமையாகும். அதற்கிணங்க, வெளியக நிறுவனங்களினால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைக்கிணங்க, இத்தகைய பயிற்சியளித்தல் உசாவுதல் சேவையானது நடாத்தப்படுகின்றன. பொதுத் திறைசேரியினால் அளிக்கப்படும் நிதிக்கமைவாக நிறுவனங்களின் செலவுகளை ஈடு செய்வதற்காக இந்நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(iii) நிபுணத்துவம் வாய்ந்த சில் விரிவுரையாளர்கள் குறிப்பிட்ட சில பாட விதானங்களில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தார்கள். விசேடமாக வெளியக உசாவுதல் சேவையானது திறன் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள குறித்த சில அட்டவணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பெறப்பட வேண்டியுள்ளன. ( ஊதாரணம். தமிழ் – ஆங்கிலம்)

### 4.3 முகாமைத்துவ குறைபாடுகள்

(அ) 2012 ஆம் ஆண்டில் கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இணங்குகிறேன். பூர்வாங்க நடவடிக்கைகளின் பின்னர் பயிற்சியளித்தல் செயற்பாடுகளை பரவலாக்கும் நோக்குடன் நுவரெலியாவில் முறையான பயிறிசியளித்தல் நிறுவகமொன்றினை நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்படி நிருமாணப் பணியானது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(இ) இந்த 13 அறைகளும் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் அவை மாணவர்களுக்காக

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வெளியிட நிறுவகங்களில் தங்குமிட வசதி தேவைப்படின் மாத்திரம் வழங்கப்படுகின்ற போதிலும் தங்குமிட வசதியானது வழங்கப்படுதல் கட்டமானதாகும்.

(ஈ) 18-2096 மற்றும் ஜி1 – 4694 எனும் இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் உரிய நிறுவனங்களுக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளன. மேலும், 300-4289 ஒப்படைக்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையானது இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டிலிருந்து தாமதமில்லாமல் மதிப்பீட்டு கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) இது தொடர்பான விடயங்கள் உள்ளடக்கிய கோவையானது 2013.01.24 ஆம் திகதி முகாமைத்துவ சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இத்தகைய பெறுமதிகளை தொடர்ந்தும் பேணுவது தேவையற்றது என முடிவெடுக்கப்பட்டது.

(ஆ) மேலும், பொதுத் திறைசேரியிடமிருந்து இந்தப் பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வதிவிட வசதிகளைப் பெற்றுக் கொண்ட உத்தியொகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்களும் இங்கே உள்ளடக்கப்பட்டுள்ளன.

(இ) i. இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

Ii இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## 4.6 பதவியினர் நிருவாகம்

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறையானது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சாரதிகளின் எண்ணிக்கையானது குறைவாக காணப்படுவதால் சாரதியொருவர் இரண்டாண்டுகளுக்கு இரண்டாந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்.

ஒரே சம்பள அளவுத்திட்டத்தின் தரவு காட்சிப்படுத்துபவர் மற்றும் தரவு பகுப்பாய்வாளர் ஒருங்கிணைப்புடனான ஒரு பதவிக்கு ஊழியர்களின் எண்ணிக்கையினைத் திருத்தும் போது தரவு காட்சிப்படுத்துபவர்களுக் இரண்டு பதவிகள் உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) இரண்டு உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறைக்கு அறிவித்துள்ளார்கள்.

## 4.7 ஊழியர்களுக்கான பணிக்கொடை ஏற்பாட்டுக்கான நிதியமொன்றினை தாபித்தல்

அவதானங்கள் மட்டும் செலுத்தப்படுள்ளதுடன் முதலீடு செய்வதன் மூலம் நிதியமொன்றினை தாபிப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் குழுவின் அறிக்கைக்கமைவாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5 பொறுப்புடைமையும் நல்லாட்சியும்

### 5.1 ஒருங்கிணைந்த திட்டம்

இச்சூழ்நிலையானது, கல்வி முறையில் மாற்றத்தினை கவனத்தில் கொள்கின்ற ஒருங்கிணைந்த திட்டத்தினைத் திருத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டதனால் எழுந்துள்ளது

### 5.2 உள்ளக கணக்காய்வு

(அ) 2012.11 ஆம் திகதிய முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின்படி, உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்தற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றினைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

(அ) தற்போது முறையாக அமுல்படுத்தப்படுகின்றது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கையினைத் தயாரிக்கும் போது இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 5.4 வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு

ஒருங்கிணைந்த திட்டத்திற்கமைவாக மதிப்பீடுகளை எதிர்வு கூறுவதற்கான ஆகக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2011 ஆம் ஆண்டுக்ரிய ஒருங்கிணைந்த திட்டத்தில் மேற்கொள்ளக்கட்ட மாற்றங்களின் காரணமாக இந்நிலமை ஏற்பட்டுள்ளது

வருமான மதிப்பீடுகளினைத் தயாரிப்பதில் ஆகக்கூடுதலான சரியான தன்மையுடன் கூடிய இலக்குகளை அடையும் வகையிலான எதிர்வுகூறல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், சாதகமான மற்றும் பாதகமான தளம்பல்கள் ஏற்படலாம். 2012 ஆம் ஆண்டுக்கான வருமானத்தினை மீளாய்வு செய்வதற்கும் 2013 ஆம் ஆண்டுக்கான மிகச்சரியான பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 5.5 வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்

உடன்படுகின்றேன். அவை 2010 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 14(2)(இ) ஆம் இல. அறிக்கையினை பெற்றதன் பின்னர் பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 6 முறைமையும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு, முறைமைகளும் கட்டுப்பாடுகளும் துறையில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சபையின் வழிகாட்டுதல்களுடன் அவற்றினை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**பி.விஜயரத்ன**

**பணிப்பாளர்.**